Registered as a NewsPaper

விலை ரூபா 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்- 12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | மார்கழி-04 | 19-12-2005 | திங்கட்கிழமை | ஓசை-304

உங்கள் நிறுவனங்களின்
உள்ளக தொலைபேசி
இணைப்புக்களுக்கு...

கிளிநொச்சியில்
அதிக நிறுவனங்களுக்கு
உள்ளகத் தொலைபேசி
இணைப்புக்களை ஏற்படுத்தியவர்கள்.

நொதேன் ரெக்னோலஜி
பிறைவேட் லிமிட்டட்

இல.52, 2ஆம்குறுக்குத்தெரு, வவுனியா.
தொலைபேசி : 024-2221649.
இல: 20, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலை பேசி : 021-2225653(சி-13518)

## சிங்கள இராணுவத்தின் மிலேச்சத்தனமான தாக்குதல்

# யாழ். பல்கலை. சந்தியில் 35 பேர் காயம்


# ச.த.மா.பே. அலுவலகம் நொருக்கப்பட்டது!

### வாகனங்களும் சேதமாக்கப்பட்டன; படையினர் ,மாணவர்களிடையே மோதல்

(யாழ்ப்பாணம்)

**யாழ். புங்குடுதீவுப் பகுதியில் சிறிலங்காப் படைகளால் கொடூரமாகப் பாலியல் வல்லுறவுக் குட்படுத்தி கொலை செய்யப்பட்ட இளம் பெண்ணின் இறுதிக் கிரியைகளில் பங்குகொள்வதற்காகச் சென்ற மாணவர்கள் மற்றும் பொதுமக்களைத் தடுத்து நிறுத்தி சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதலில் 35இற்கும் மேற்பட்டோர் காயங்களுக்குள்ளாகினர். அத்தோடு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகமும் பல வாகனங்களும் அடித்து நொருக்கப் பட்டன.**

(12ஆம் பக்கம் பார்க்க)



அடித்து நொருக்கப்பட்ட சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகம். (படம் : ஆன்சிலீன்)

### ஈழநாதம் செய்தியாளர் மீது படையினர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அடித்து நொருக்கப்பட்டது மற்றும் படையினரின் தாக்குதல் சம்பவங்களால் உருவான நிலை போன்றவற்றை புகைப்படம் பிடிப்பதற்கும் செய்தி சேகரிப்பதற்கும் சென்ற "ஈழநாதம்" செய்தியாளர் படையினரால் துப்பாக்கிமுனையில் தாக்கப்பட்டுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தைப் புகைப்படம் பிடித்துக் கொண்டிருந்த சமயம் படையினரால் அவர் தாக்கப்பட்டார். அவரின் புகைப்படக் கருவியையும் படையினர் பறிப்பதற்கு முயன்றுள்ளனர். இத்தாக்குதல் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் முன்னிலையில் இடம்பெற்றது.

(12ஆம் பக்கம் பார்க்க)

### கொழும்பில் தமிழர் வாழும் பகுதிகளில் திடீர் சுற்றிவளைப்பு; 200 பேர் கைது

(கொழும்பு)

கொழும்பில் தமிழர்கள் செறிந்து வாழும் வெள்ளவத்தை, கிருலப்பனை, பம்பலப்பிட்டி, நாரஹேன்பிட்டிப் பகுதிகளில் நேற்று அதிகாலை முதல் பொலிசார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.

இத்தேடுதல்களின் போது 200பேர் வரையில் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதிகாலை முதல் தமிழர்களின் வீடுகளிற்குள் நுழைந்த இராணுவத்தினரும், பொலிசாரும் வீடுகளில் சோதனை நடாத்தியதுடன் இளைஞர், யுவதிகளை பல்வேறு கேள்விகளைக் கேட்டு துன்புறுத்தியுள்ளனர்.

இதேவேளை தினக்குரல் நாளிதழின் செய்தியாளர்கள் மூவர் அலுவலகத்திலிருந்து நேற்று முன்தினமிரவு தமது வீடு நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் கிருலப்பனையில் வைத்து கைது செய்யப்பட்டனர். தாம் ஊடகவியலாளர்கள் என்பதை உறுதிப்படுத்தும் அடையாள

(12ஆம் பக்கம் பார்க்க)

## இளம்பெண் படுகொலையைக் கண்டித்து-

### புங்குடுதீவில் மக்கள் ஆர்ப்பாட்டம் படையினரின் சூட்டில் பொதுமகன் காயம்

(தீவகம்)

யாழ்ப்பாணம் புங்குடுதீவில் வைத்து யுவதி ஒருவர் சிறிலங்கா கடற்படையினரால் பாலியல் வல்லுறவிற்குள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து அப்பகுதி மக்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை கடற்படையினர் கடுமையாகத் தாக்கியதுடன் துப்பாக்கிப் பிரயோகமும் செய்துள்ளனர். இதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

குறித்த யுவதி படுகொலை செய்யப்பட்ட இடத்திற்கு அண்மையில் உள்ள கடற்படை முகாமிற்கு முன்னால் மக்கள் நேற்றுக் காலை முதல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். வீதிகளை மறித்து ரயர்களைப் போட்டு எரித்து மறியலில் ஈடுபட்டனர். இதன் போது கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில்

(12ஆம் பக்கம் பார்க்க)



துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர்.

# யுத்த நிறுத்தத்தை மோசமாக்கும் செயற்பாடாக புங்குடுதீவு சம்பவத்தைக் கருதவேண்டியுள்ளது

### யாழ்.மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர்

(அலுவலக செய்தியாளர்)

யுத்த நிறுத்த உடன்பாடு நூல் இழையில் தொங்கிக்கொண்டிருக்கிறது. இந்த நிலையில் அதனைக் காப்பாற்றுவதற்கு மாறாக அறுத்தெறிந்து நிலைமையை மோசமாக்கும் செயற்பாட்டில் படையினர் ஈடுபட்டு வருகின்றனர். இதனையே யாழ்ப்பாணம் புங்குடுதீவில் நேற்று முன்தினம் நடைபெற்ற பாலியல் வல்லுறவுச் சம்பவம் எடுத்துக்காட்டுகிறது.இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவிததுள்ளார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்,

இன்று யாழ்.குடாநாடு யுத்தச் சூழல் போல் காட்சிதருகிறது. அங்கு மக்கள் வீதியால் செல்ல முடியாத நிலை, வீடுகளில் நிம்மதியாக இருக்கமுடியாத நிலையை படையினர் உருவாக்கியிருக்கின்றனர். எங்கும் சுற்றிவளைப்புக்கள் கண்மூடித்தனமான தாக்குதல்கள், காயப்படுத்தல்கள் போன்ற சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

நாம் நூல் இழையில் தொங்கும் சமாதானத்தை காப்பாற்றுவதற்கு தயார் என அறிவித்திருந்தோம். அதற்கான பேச்சுவார்த் தைக்கும் தயார் எனவும் தெரிவித்திருந்தோம். எனினும் படைத்தரப்பு அதற்கான ஆக்கபூர்வமான சூழ்நிலைகளை ஏற்படுத்தவில்லை

(12ஆம் பக்கம் பார்க்க)

### புங்குடுதீவில் இளம் பெண் படுகொலைக்கு தமிழ் தேசிய விழிப்புணர்வுக் கழகம் கண்டனம்

புங்குடுதீவில் சிறிலங்காக் கடற்படையினரால் இளம் பெண் ஒருவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்து தமிழ்தேசிய விழிப்புணர்வுக்கழகம் கண்டன அறிக்கை வெளியிட்டுள்ளது. கடந்த காலப்

(12ஆம் பக்கம் பார்க்க)

### மகிந்தவின் இந்தியப் பயணத்தில் பங்கேற்க ஜே.வி.பி. மறுப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் டிசம்பர் 27ஆம் திகதி மேற்கொள்ளும் இந்தியப் பயணத்தில் பங்கேற்க ஜே.வி.பி. மறுத்துவிட்டது.

இந்தியப் பயணம் மேற்கொள்ளும் தம்முடன் ஜே.வி.பி. குழுவினரை அனுப்புமாறு மகிந்த ராஜபக்ஷ கேட்டிருந்தார்.

ஆனால், வெளிவிவகாரங்களில் தமது தலையீடு இல்லாமல் மகிந்த ராஜபக்ஷ செயற்பட தாங்கள் அனுமதிப்பதாக ஜே.வி.பி. பதிலளித்துள்ளது.

ஜே.வி.பி. நிறுவனர் றோகண விஜய வீர காலத்தில் அக்கட்சி கடுமையான இந்திய எதிர்ப்பு நிலையை

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### புதிய பிரிவுகள் ஆரம்பம

இணையத்தளங்களை உருவாக்கக் கூடிய உயர்கற்கை நெறி

**Dreamweaver MX**

வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

தொடர்புகட்கு:

விண்நெற் கணனி பயிற்சி நிலையம்
டிப்போவீதி, கிளிநொச்சி

(சி.13074)

### இறப்பர் முத்திரை

கிளிநொச்சியில் பொலிமர் றபர் ஸ்டாம் (இறப்பர் முத்திரை) உடனுக்குடன் செய்து கொள்ளவும், போட்டோக்கொப்பி,லெமனேட்டிங் போன்றவைகளை உடனுக்குடன் செய்து கொள்ளவும், பிள்ளையார் பொத்தக சாலை. கண்டிவீதி, கிளிநொச்சி.

T.P.2285750 (சி.13263)

### கிளி.சீமெந்துக்கல் ஆக்கம்

வேலித்துண்கள், சீமெந்துக்கல், பூக்கல்வகை, பூச்சாடிகள், அழகுத் தூண்கள் என்பன நியாய விலைக்கு விற்பனைக்கு உண்டு. வைத்திய சாலை பின், கிளிநொச்சி. (7154)

### காணி, வீடு விற்பனைக்கு

வீடு, காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. கிணறு 22 அடி விட்டம், தென்னை, பனை மரம் உள்ளது. பிரயோசனமுள்ள காணி இருக்கின்ற காணி, 1.1/2 ஏக்கர் வயல் 2 ஏக்கர் இருபோகஞ்செய்யக் கூடியது. விலை பேசித்தீர்த்துக் கொள்ளலாம். தொடர்பு:- சி. சிறீகாந்தன், 210 ஜெயந்திநகர், கிளிநொச்சி.

(7082)

## தமிழீழ மாவட்ட குற்றவியல் நீதிமன்று கிளிநொச்சி

வழ.இல:- 160/2005
தன்மை:- தாபரிப்பு

மனுதாரர்:-
தர்மபாலன் லீலாவதி,
கோயில் வயல்,
இயக்கச்சி.

எதிர்மனுதாரர் :-
தனபாலசிங்கம் தர்மபாலன்,
அல்லாரை தெற்கு,
கொடிகாமம்.

எதிர்மனுதாரரின் பிணையாளி :-
தேவராசா அமிர்தநாயகி,
வெள்ளாம் போக்கட்டி,
கொடிகாமம்.

### பகிரங்க தடை அறிவித்தல்

மேற்படி இலக்க வழக்கில் கீழ்வரையப்பட்ட ஆதனடாப்பில் உள்ள ஆதனம் எதிர் மனுதாரரான தனபாலசிங்கம் தர்மபாலன் சார்பில் தேவராசா அமிர்தநாயகியால் 400,000/- உறுதிப்பிணையுடன் கூடிய ஆட்பிணையில் விடப்பட்ட ஆதனம் ஆகும். குறித்த எதிர் மனுதாரர் அல்லது அவரின் பிணைநபர் பல தடவைகள் மன்றிற்கு தோன்றாமையினால், 15.12.2005 அன்றைய கட்டளையினால் குறித்த பிணை ஆதனம் பிணை மாற்றம் செய்தல் அல்லது. விற்பனை செய்தல் அல்லது வேறுவகையில் பராதீனப்படுத்தல், தடை செய்யப்பட்டுள்ளது.

ஆதனடாப்பு- வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்ரிக் தென்மராட்சிப் பகுதி கச்சாய் கோயில் பற்று அல்லாரை இறைமனைவளவு நிலபரப்பு (10) பத்து எல்லைகள் கிழக்கு முத்திலிங்கம் கந்தசாமிக்கும், முதலித்தம்பி சச்சிதானந்தனுக்கும் பெண் பகவதிப்பிள்ளைக்கும் உரிய ஆதனம் ஆகும், வடக்கு- வாய்க்கால் மேற்கு-வீதி, தெற்கு- கொள்வனவுக்காரருக்குரிய ஆதனம், இவ்வெல்லைகள் அடங்கலும் இதைச் சேர்ந்தவைகளுமான ஆதன இலக்கம் 7589/11,08,82 எனும் அறுதியுறுதியுடைய ஆதனமாகும்.

" மன்றின் கட்டளைப்படி"

வரைபும்:-
தி. சிவகுமார்,
தமிழீழ சட்டவாளர்
ஆழியவனை.

செ. மாணிக்கராசா,
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்று,
கிளிநொச்சி.

(7155)

## 42ஸ்ரீ 2323 (இசுசு) பாரவூர்தி பகிரங்க ஏலவிற்பனை 28.12.2005

பூநகரி பல நோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் 42ஸ்ரீ2323 ஆம் இலக்க பாரவூர்தி பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளது. பாரவூர்தியினை 19.12.2005 ஆம் திகதியில் இருந்து 24.12.2005 ஆம் திகதி வரை எமது காரியாலயத்திலும், 26.12.2005 ஆம் திகதியில் இருந்து 27.12.2005 ஆம் திகதி வரை கரைச்சி வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பரந்தன் பாரவூர்தி தரிப்பிடத்திலும் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம் 28.12.2005 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு பரந்தன் சங்கத்தில் வைத்து பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும்.

01) மீளளிப்பு முற்பணமாக ரூபா 1000/- வை செலுத்தியே கேள்வியில் பங்குபற்றலாம்.

02) தெரிவு செய்யப்படுவோர் கேள்வித் தொகையில் 25% த்தினை உடன் செலுத்துவதுடன், மிகுதிப் பணத்தினை மூன்று நாட்களுக்குள் செலுத்தி பாரவூர்தியினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

பூநகரி பல நோக்குக்கூட்டுறவுச் சங்கம்,
நாகதேவன்துறை வீதி,
வாடியடி, பூநகரி.

(சி.13576)

திரு.கா.கார்த்திகேசு,
தலைவர்,
பூநகரி ப.நோ.கூ சங்கம்.

## இரண்டாம் கட்டமாக காணி வழங்கல்

(வவுனியா)

அரச அதிகாரிகளுக்கு காணி வழங்கும் இரண்டாம் கட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக வவுனியா பிரதேச செயலகம் தெரிவிக்கின்றது

இதற்காக அரச அதிகாரிகளை தெரிவு செய்யும் நேர்முகத் தேர்வு நடைபெற்றுள்ளது. முதல் கட்டமாக 600 பேருக்கு காணி வழங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக 1500 பேர் வரை விண்ணப்பங்கள் அனுப்பியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஏற்கனவே சாம்பல்தோட்டம் பகுதியில் இவ்வாறு திட்டம் ஆரம்பிக்கப்பட்டு தற்போது வீடுகள் கட்டி முடியும் தருவாயில் உள்ளமை குறிப்பிடத் தக்கது.

இரண்டாம் கட்டமாக வழங்கப்படவிருக்கும் காணியானது ஓமந்தை பகுதியை அண்டிய பகுதியில் வழங்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. இம்முறை வழங்கப்படும் காணிகள் வவுனியாவில் நிரந்தரமான தொழில் புரிபவர்களுக்கும் காணியற்றவர்களுக்குமே வழங்கப்படவுள்ளது.

(21)

## 50 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள்

(வவுனியா)

இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெயர்ந்து அடப்பங்குளம். சாந்தசோலை ஆகிய பகுதிகளில் வாழ்ந்து வரும் 50 குடும்பங்களுக்கு நிரந்தரவீடு அமைத்துக் கொடுக்கும் பணிகள் தற்போது செட்டிகுளம் கந்தசாமி நகர் பகுதியில் நடைபெற்று வருகிறது. இந்த பணிகளை போருட் நிறுவனம் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான அமைப்பின் நிதியுதவியுடன் மேற்கொண்டு வருகின்றது.

(21)

## "புதிய காலத்தை எதிர் கொள்வோம்"

ரதன்கலையகம்- கிளிநொச்சி
ரதன் கலையகம்- முல்லைத்தீவு

*ஆகியவற்றின் ஒரு மித்த சங்கமிப்பு*

காலம் :- 21-12-2005 தொடக்கம் 23.12.2005 வரை
இடம் :- ரதன்கலையகம் முல்லைத்தீவு
தண்ணீரூற்றுச் சந்தி தண்ணீரூற்று

*பயனுள்ள வகுப்புகள், சிறப்புக்கலந்துரையாடல்கள்*
*புகழ் பெற்ற திரைப்படங்கள் காட்சிப்படுத்தல்*

*உணவு, தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்.*

*ஆதரவாளர்கள் மற்றும் ஆர்வமுடையவர்களை அன்போடு அழைக்கின்றோம்.*

(சி-13575) நிர்வாகம்.

## சாவு அறிவித்தல்

### சிவகுரு சிவன்ஜயா

ஏழாலை வடக்கு, ஏழாலையை பிறப்பிடமாகவும் பாடசாலை வீதி, ஆனைவிழுந்தான் கிளிநொச்சியை தற்போதைய முகவரியாகவும் கொண்ட சிவகுரு சிவன்ஜயா 18.12.2005 நேற்றுக் காலமானார்.

அன்னார் பரமேஸ்வரியின் அன்புக்கணவரும், லோகராஜ், சிவாயினி, கிருபாகரன், சியாமினா (செல்வமலர் போராளி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவபாதம் (கல்வியங்காடு), சிவம் (ஏழாலை வடக்கு) சிவலிங்கம் (ஏழாலை வடக்கு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அன்னலிங்கம் (ஏழாலை மத்தி), தம்பு இரஞ்சிதமலர் நவமணி (ஆனைக்கோட்டை), திருநாமம்( கனடா), காலஞ் சென்ற விக்கினேஸ்வரன் ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது தற்போதைய இல்லத்தில் இன்று நடைபெறும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:-
கிருபாகரன் (மகன்)

(7156)

## நெஞ்சை அள்ளும் நினைவலைகள்

### 06 ஆம் ஆண்டு நினைவாக



### லெப்.எழிச்செழியன்

### (சண்முகநாதன் சுரேஸ்காந்தன்)

வீரத்தின் சிகரமாக நின்று
வீரப்புலி அணியில் இணைந்து
வீரதீர சாதனை படைத்து
விடியலை நேசித்த ஈழச்செழியனே!

ஆனையிறவை அடிபணியவைக்க
சாள்ஸ்அன்ரனி சிறப்புப்படையணியின்-போர்வீரனாக நின்று
விழுப்புண் கொண்டும் வேங்கையென வீறுகொண்டு
எழுந்து
வெற்றி முரசு கொட்டி மண்ணை முத்தமிட்ட
ஈழச்செழியனே

தந்தைதாய் சகோதரிகளின் அன்புவலையை கிழித்து
தமிழ்ஈழத்தை நெஞ்சிலே நிறுத்தி
தலைவன் விடுதலை வேள்வியில் ஆகுதியாகி
ஆறென்ன அறுபது வருடம்கடப்பினும்
ஆறாது எம்துயரம்.

பிறப்பு:- 19-05-1978

வீரச்சாவு :-19-12-1999

*2ஆம் வட்டாரம்,*
*கோம்பாவில்,*
*மு/புதுக்குடியிருப்பு.*

(6963)

*தகவல்: திரு. திருமதி*
*சண்முகநாதன்,*
*குடும்பம்.*



மருத்துவமனையில் இறந்தோரதுசடலங்கள்



காயப்பட்டோர் மருத்துவமனைக்கு



நெரிசலுக்குக் காரணமான கதவருகே பொலிசார்.

# நிவாரணம் பெறத்திரண்டோர் இடையே நெரிசல் மூச்சுத்திணறி, மிதிபட்டு 43 பேர் பரிதாப மரணம்

## –சென்னையில் துயரச்சம்பவம்

(சென்னை)

தமிழகம் சென்னையில் நேற்று வெள்ள நிவாரணம் பெறக் கூடிய மக்களிடையே ஏற்பட்ட திடீர் நெரி சலில் 43 பொதுமக்கள் பலியாகினர், பலர் காயமடை.ந்துள்ளனர். இத்துயரச் சம்பவம் பற்றித் தெரிய வருவ தாவது.

கே.கே.நகர் பகுதியில் இருக்கும் எம்.ஜி.ஆர். நகரில் உள்ள அரசு அறிஞர் அண்ணா உயர்நிலைப் பள்ளியில் நிவாரணப் பணம் வழங் கும்மையம் திறக்கப்பட்டிருந்தது. நேற்று முன்தினம் .காலை முதல் அங்கு பணம் வழங்கினார்கள். மாலையில் பணம் வழங்கப்படுவது நிறுத்தப்பட்டது.

நேற்றுக் காலை முதல் விடுபட்ட வர்களுக்கு மீண்டும் பணம் வழங் கும் பணி தொடரும் என்று அறிவிக் கப்பட்டிருந்தது.இதற்காக நேற்று முன்தினம் இரவு ஏழு மணிமுதலே இங்கு மக்கள் கூடத் தொடங்கினார் கள். நள்ளிரவு சுமார் இரண்டாயிரம் பேர் அங்கு நீண்ட வரிசையில் நின் றனர்.

இந்த நிலையில் நிவாரணப் பணம் வழங்குவது இன்றுடன் நிறுத்தப்பட்டு விடும் என்று யாரோ தகவலைப் பரப்பி விட்டனர். எனவே கூட்டம் அதிகமாகிக் கொண்டே இருந்தது. நிவாரணநிலையத்தின் கதவு பூட்டப் பட்டிருந்தது.

எனவே அனைவரும் பள்ளி சுற் றுச் சுவருக்கு வெளியே வரிசை யில் நின்றனர். புரளி கிளம்பியிருந்த காரணத்தினால் அதிகாலை மூன்று மணி அளவில் ஐயாயிரத்துக்கும் மேற்பட்டோர் அங்கு திரண்டு விட் டனர்.

அதிகாலை நான்கு மணி அள வில் திடீரெனப்பலத்த மழைபெய்யத் தொடங்கியது. இதனால் வரிசையில் நின்றவர்கள் மழைக்கு ஒதுங்கு வதற்காக அங்கும் இங்கும் ஓடி னார்கள். மழை நீடிக்கவே சிலர் நிவாரண நிலைய பாடசாலைக்குள் சென்று ஒதுங்கலாம் என கதவை பிடித்துத் தள்ளினார்கள்.

கதவு திறந்து கொண்டது. உடனே அனைவரும் முண்டியடித் தபடி பாடசாலைக்குள் செல்ல முற் பட்டனர் ஒரே நேரத்தில் ஆயிரக் கணக் கானவர்கள் நுழைந்ததால் அந்த வழியில் கடும் நெரிசல் ஏற்பட் டது. நெரிசலில் சிக்கி சில பெண்கள் கீழே விழுந்தனர். ஆனால் அவர் களை யாரும் தூக்கி விடாமல் அவர் கள் மீது மிதித்துக் கொண்டு ஓடத் தொடங்கினார்கள்.

நூற்றுக் கணக்கானவர்கள் மிதித்ததால் பலரும் அந்த இடத்தி லேயே மயங்கி விழுந்தனர். என் றாலும் எல்லோரது கவனமும் பள் ளிக் கூடத்திற்குள் ஓடிச்சென்று வரி சையில் இடம்பிடிப்பதிலேயே இருந் தது. இதன் காரணமாக நெரிசலில் சிக்கியவர்களை யாரும் கவனிக்க வில்லை. எங்கு பார்த்தாலும் அலற லாக இருந்தது. ஒட்டுமொத்தமாக ஐயாயிரம் பேரும் உள்ளே நுழைந் ததால் நெரிசல் மேலும் அதிகமாகி நசுங்கினார்கள்.

ஏராளமானோர் படுகாயம் அடைந்து சுருண்டு விழுந்தனர். பலருக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டது. அவர்கள் அந்த இடத்திலேயே உயிர் இழந்தனர். பலர் மயங்கி விழுந்து கிடந்தனர்.

சம்பவம் பற்றி அறிந்ததும் கே.கே.நகர் பொலிசார் அங்கு சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர். அப் போது 13 பெண்கள், 15 ஆண்கள் உட்பட 30 பேர் அங்கு பிணமாகக் கிடந்தனர்.

25-இற்கும் மேற்பட்டோர் படு காயத்துடன் மயங்கிக் கிடந்தனர். அவர்களை மருத்துவமனைகளுக்கு எடுத்துச் சென்றனர். வழியில் சிலர் இறந்தனர். மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி சிலர் இறந்தனர் நேற்று காலை 9 மணி நிலவரப்படி 43 பேர் பலியானதாகத் தெரியவந்தது.

இறந்தவர்களின் உடல்கள் ராயப்பேட்டை மற்றும் அரச பொது மருத்துவமனைக்கு கொண்டு செல் லப்பட்டது. காயமடைந்தவர்கள் அரச மருத்துவமனையில் சேர்க்கப்பட் டுள்ளனர் அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

## - ஹொங்கொங்கில் -

# மாநாட்டை எதிர்த்தோர்மீது பொலிசார் தாக்குதல் 20 பேர் காயம்

(ஹொங்கொங்)

ஹொங்கொங்கில் ஆறாவது உலக வர்த்தக மாநாடு நடைபெற்று வருகிறது. இந்த மாநாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தென்கொரியாவைச் சேர்ந்தவர்கள் உட்பட பத்தாயிரம் பேர் நேற்று முன்தினம் பேரணியாக சென்று ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். மாநாடு நடக்கும் இடத்துக்கு ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்கு முன்னதாக பொலிசார் அணிவகுத்து நின்றனர். அங்கு அமைக்கப்பட்ட தடுப்புக்களை மீறி ஆர்ப்பாட்டக்காரர்கள் செல்ல முயன்றனர். இதனால் பொலிசாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்குமிடையே மோதல் ஏற்பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்களை விரட்டியடிக்க தண்ணீர் விசிறப்பட்டது.

மிளகுப்பொடிவீசப்பட்டது. இந்தச் சம்பவங்களில் ஆர்ப்பாட்டக்காரர்கள் 20பேர் காயமடைந்தனர். கண்ணீர்ப்புகைக் குண்டுகள் வீசப்பட்டதால் அப்பகுதி முழுவதும் புகை மண்டலமாகக் காட்சியளித்தது.

## சிலைவழிப்பில் ஒரு தலை

கர்நாடக மாநிலம் ஹூப்ளியில் நிறுவப்பட்டுள்ள 61 அடி பர்வஸ்நாத் சிலைக்கு கலைஞர்கள் இறுதி வடிவம் கொடுக்கின்றனர்.



# பெற்றோர்கள் விவாகரத்து செய்தால் எப்படி வாழ்வது 10 வயது சிறுமி எழுதிய அறிவுரைப் புத்தகம்

(லண்டன்)

எப்படியெல்லாமோ புத்தகங்களை எழுதி சாதித்த குழந்தைகளைப் பார்த்திருப்பீர்கள் இதோ பத்து வயது லிப்பி என்ற சிறுமி எழுதிய புத்தகம் உலக அளவில் பிரபலம் அடையப் போகிறது.

புத்தகத்தில் என்ன இருக்கிறது? "பெற்றோர் விவாகரத்து செய்தால், குழந்தைகள் எப்படி சாமாளிப்பது? வாழ்க்கையை சந்தோஷமாக தொடர் வது" என்பது பற்றி ஏகப்பட்ட துணுக் குகள் தந்துள்ளார். இந்தக் குட்டி எழுத்தாளர்.

லண்டனைச் சேர்ந்த லிப்பி ரீஸ் வயது பத்து தாய் கேதரின், தந்தை லாக்மென் ஆகியோருக்கு பிறந்த குழந்தை சிறு வயதிலேயே பெற்றோர் விவாகரத்துச் செய்துகொள்ள வேண் டிய நிலை ஏற்பட்டது. இருவருக்கும் எப்படியெல்லாம் கருத்து வேறுபாடு ஏற்படுகிறது என்பதை உணர்ந்தாள் லிப்பி.

மற்றயக் குழந்தைகள் போல, வழி தவறாமல், தன் தாயுடன் தொட ர்ந்து வாழ்க்கையை நடத்தி சாதித்தும் காட்டிவிட்டாள் லிப்பி. எப்படி தெரி யுமா? சிறிய வயதிலேயே புத்தகம் எழுதி சாதித்துக்காட்டத் தயாராகி விட்டாள்.

அவள் எழுதிய புத்தகத்தின் பெயர் ஹெல்ப் ஹோப் ஹேப்பினஸ் என்பது தான். 60 பக்க வழிகாட்டி புத்தகம் இது. விவாகரத்து என்பது சகஜமாகி விட்டது. அப்படி பெற்றோர் பிரியும் போது அதனால் பாதிக்கப்படும் குழந்தைகள் தான் இப்படிப்பட்ட சூழ்நிலையில் எப்படி சமாளித்து படித்து சாதிப்பதுடன் மனநிலையை தெளிவாக வைத்துக்கொள்ள வேண் டும் என்றெல்லாம் பல துணுக்கு களைத்தந்து எழுதியிருக்கிறார் அந்தக்குட்டி எழுத்தாள் இதோ அவர் தந்ததுணுக்குகள்

நீங்கள் தனிமையில் இருக்காதீர் கள். அப்படியிருந்தால் புத்தகம் படி யுங்கள் தொலைக்காட்சி பாருங்கள்

கண்ணாடி முன்பு தினமும் நின்று நான் சந்தோஷமாக இருக்கிறேன். என்று சொல்லிக் கொள்ளுங்கள்.

நீங்கள் கவலையாக இருக்கும் போது ஏதாவது ஒரு பழமொழியை நினைத்து அதன்படி சதாகமாக சிந்தி யுங்கள். தனி அறையில் இருந்து கொண்டால் மனதில் உள்ளதை கொட்டி அழுது விடுங்கள்.

உடற்பயிற்சி செய்யுங்கள் அது உங்கள் உடலுக்குப் புத்துணர்சி தரும் அப்போது தான் உங்களால் எதை யும் எதிர்கொள்ளும் மனப்பக்குவத்தை பெற முடியும். இப்படி சமூக சமுதாய அறிவியல் ரீதியாக பல விடயங்களை தந்துள்ளாள் லிப்பி. புத்தகம் பிரிட் டனில் மட்டுமின்றி உலக அளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தும் என்று பதிப்பாளர் எதிர்பார்க்கிறார்.

## உல்லாசச் சவாரிக்கு...



சீனாவின் கன்சு பகுதியில் சுற்றுலாவை ஊக்குவிக்கும் பொருட்டு புதிதாக குதிரைச்சவாரி தொடங்கப் பட்டுள்ளது.

# பனிக்குளிரில் 30பேர் பலி

(புதுடில்லி)

இந்திய வடமாநிலங்களில் கடு மையான குளிருக்கு 30பேர் பலி யாகியுள்ளனர். உத்தரப் பிரதேசம், இமாச்சல பிரதேசம், பஞ்சாப், சண்டி கரில் கடந்த ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு இந்த ஆண்டு கடுமை யான குளிர் காலநிலை நிலவுகின் றது. இதனால் சண்டிகரில் பஞ்ச குலா என்ற இடத்தில் உள்ள குடிசைவாசிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.


இங்குள்ள குடிசைகளில் தார் பாய்களை போட்டு வைத்துள்ளனர். குடிசைகளுக்கு வெளியே தீமூட்டி குளிர்காய்கிறார்கள். நடுங்கும் குளி ரால் குழந்தைகளுக்கு நோய் ஏற் பட்டுள்ளது. வடமாநிலங்களில் மூன்று நாளில் பரவலாக 30 பேர் இறந்துள் ளதுடன் மேலும் குடிசைப்பகுதியில் தான் பலர் பலியாகியுள்ளனர் எனத் தெரிகிறது. உத்தரப்பிர தேசத்தில் மட் டும் 19 பேர் இறந்தனர். மூடுபனி காரணமாக காலை நேரத்தில் வாகனப் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

# வாக்குப் பெட்டி சேகரிப்பில் ஐ.நா. விசேட தூதுக்குழுவினர்

(பாக்தாத்)

ஐ.நா. அமைப்பினால் நியமிக்கப்பட்டுள்ள விசேட தூதுக்குழுவினர் ஈராக்கின் பல்வேறு பிரதேசங்களிலும் உள்ள வாக்குப்பெட்டிகளை சேகரிக்கும் பணிகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஈராக்கில் சதாம் ஹுசைன் ஆட்சி அகற்றப்பட்ட பின்னர் நான்கு ஆண்டு பதவிக் காலத்தைக் கொண்ட புதிய பாராளுமன்றத்தைத் தெரிவு செய்வதற்கான பொதுத்தேர்தல் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. ஈராக்கின் 18 மாநிலங்களில் நடைபெற்ற இந்தத் தேர்தலில் 15 மில்லியன் ஈராக்கியர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். இந்தத் தேர்தலின் வாக்குப் பெட்டிகளை பாக்தாத்தில் உள்ள தேர்தல் கண்காணிப்பு தலைமை நிலையத்துக்குக் கொண்டு செல்லும் பணியில் ஐக்கிய நாடுகள் சபையால் நியமிக்கப்பட்ட விசேட தூதுக்குழுவினர் ஈடுபட்டுவருகின்றனர். இத்தேர்தல் முடிவுகள் அடுத்த மாதமளவிலேயே வெளியாகலாம் என ஈராக்கியத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இப்படி ஒரு வரவேற்பு



யப்பானில் கிறிஸ்மஸ் விழாவை ஊக்குவிக்கும் பொருட்டு வியாபார நிலையம் ஒன்றில் கடைக்கு வரும் வாடிக்கையாளர் களுக்கு கிறிஸ் மஸ்தாத்தா போன்று, உடையணிந்தோர் பரிசுப்பொருட்கள் கொடுத்து வரவேற்கின்றனர்.

# வீதி புனரமைப்பில் தாமதம் போக்குவரத்து பாதிப்பு

(முல்லை)

முல்லை செம்மலை வீதிபோக்கு வரத்து செய்ய முடியாத நிலையில் உள்ளதென அவ் வீதியாற் பயணத் தினை மேற்கொள்வோர் கவலை தெரிவிக்கின்றனர். கனரக வாக னங்கள் முதல் சிறிய ரக வாகனங்கள் வரை இவ்வீதியால் செல்ல முடியா துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

வீதியின் ஒரு மருங்கில் வீதி திருத்துவதற்கு கிரவல் பறிக்கப்பட்ட நிலையில் ஒரு பக்கத்தினூடாகவே போக்குவரத்து இடம்பெற்றதனால் வீதியில் பாரிய குழிகள் ஏற்பட்டு தற் போதைய மழைநீர் தேங்கி நிற்பதால் பயணிகள் பயணிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. அது மட்டு மல்லாது மழை நீர் வீதியை மூடிப் பாய்ந்த நிலையில் வீதிகள் மோசமாக இருப்பதால் ஈருருளிகள், பாதசாரிகள், உந்துருளிகள் என்பன செல்ல முடியாத நிலையில் இவ் வீதி மிகமோசமான நிலையில் இருப்பதை அவதானிக்க முடிகின் றது. (20)

## குடியிருப்பினுள் நீர் புகுந்தது!

(முல்லைத்தீவு)

கடுமையாகப் பெய்து வரும் மழையினால் சிலாவத்தை தெற்கு சியோநகர் தற்காலிக குடியிருப்பில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக முன்பள்ளிக்குள் நீர் நிற்பதனால் முன்பள்ளி நடாத்த முடியாத நிலை காணப்படுவதுடன் மக்களின் வீடுகளி னுள்ளும் மழை நீர் சென்று பெரும் சிரமப்படுவதை நேரில் காண முடி கின்றது. (20)

# பூநகரி கடற்பரப்பில் தொடரும் சிறிலங்கா கடற்படை அடாவடி

## –மீனவர்கள் மத்தியில் விசனம்

(பூநகரி)

பூநகரி பள்ளிக்குடாக் கடலிலும், சங்குப் பிட்டிக் கடலிலும், சிறிலங்கா கடற்படையினர் அடாவடித்தனத் தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த பல நாட்களாக பூநகரி பள்ளிக்குடாக் கடலிலும், சங்குப் பிட்டிக் கடலிலும், கடற்படையினரின் கண்மூடித்தனமான செயல்களால் பல இலட்சம் ரூபா பெறுமதியான வலைகள் அறுக்கப்பட்டதுடன் வலைகள் அள்ளிச் செல்லப்பட்டதாக வும், தமக்கு முறைப்பாடு கிடைத் துள்ளதாக பள்ளிக்குடாக் கடற் றொழில் சங்கத் தலைவர் தெரிவித் தார்.

இது தொடர்பாக மீன்பிடித் தொழி லாளி மார்க்கண்டு சுரனைச் சந்தித்த போது கடந்த 28 ஆம் திகதி சங்குப் பிட்டி கடலில் தனது நான்கரை அங் குல ஒன்பது இழைவலை பத்து கடற் படையினரால் அள்ளிச் செல்லப்பட்ட துள்ளதாக கூறினார்.

அத்துடன் தன்னுடன் தொழில் செய்யும் தீபன் என்பவருடைய ஐந்து வலைகளும் அள்ளிச் செல்லப்பட்ட தாக தெரிவிக்கப்பட்டது.

இது இவ்வாறு இருக்க குருநகர் மீனவரின் றோலர்களும், வெடிமருந்து படகுகளும் மீன்பிடித்தொழிலாள ருக்கு சேதத்தை ஏற்படுத்துகின்றது. இது தொடர்பாக குருநகர் மீனவர்கள் சிலர் தமது சங்கக்கட்டுப்பாடுகளை மீறி தன்னிச்சையாகவே இச் செயற் பாட்டைச் செய்து வருகின்றனர். என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக மீளக் குடியமர்ந்த இம் மீனவர்கள் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டி யுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதைத் தவிர கிளாலி கடற்படை முகாமில் இருக்கும் கடற்படையினர் பகல் வேளையில் மீன்பிடித் தொழி லாளர் தொழில் செய்யும் பகுதிக்குள் வந்து செல்வதும் மீனவர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள் ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (34)

# காலாவதியான உணவுப் பொருட்கள் பூநகரி பிரதேசத்தில் கண்டு பிடிப்பு!

## சில அரைக்கும் ஆலைகளுக்கும் தற்காலிக தடை

(அலுவலகசெய்தியாளர்)

**தமிழீழ சுகாதார சேவையினரும், பூநகரி சுகாதார திணைக்களமும் இணைந்து பூநகரிப் பிரதேசத்தில் சுகாதாரத்திற்கு ஊறுவிளைவிக்கக்கூடிய காலாவதியான பொருட்களை கண்டுபிடித்து அழித்துள்ளதுடன் சுகாதாரத்திற்கு ஊறு விளைவிக்கும் வகையில் இயங்கி வந்த அரிசியாலைகள் மற்றும் அரைக்கும் ஆலை கள் தற்காலிகமாக மூடப்பட்டன.**

இது குறித்து தமிழீழ சுகாதார சேவைகள் நிர்வாகப் பொறுப்பாளர் பா.நல்லவன் கருத்து தெரிவிக் கையில்; கடந்த புதன் அன்று பூநகரிப் பிரதேசத்திலுள்ள அரிசி ஆலைகள், அரைக்கும் ஆலைகள், சிகை அலங்கரிப்பு நிலையங்கள் என் பவற்றில் தமிழீழ சுகாதார சேவையி னரும், பூநகரி சுகாதார திணைக் களமும் இணைந்து மேற்கொண்ட ஆய்வில் மேற்படி நிலையங்களில் சுற்றாடல் சுகாதாரத்திற்கு ஊறு விளைவிக்குமளவிற்கு அந் நிலை யங்களில் நுளம்புகள் பெருக்க மடையும் வகையிலும் மழைநீர் தேங்கி காணப்பட்டதுடன் பொதுவாக சுற்றுப் புற சுற்றாடல் சுகாதாரமற்ற முறையில் காணப்பட்டமை இனங் காணப்பட்டுள்ளது. எனவே இந் நிலையங்களுக்கு முன்னதாகவே சுகாதார அறிவித்தல் வழங்கப்பட்டும் இந்நிலையங்கள் அதனைப் பின்பற்றா துள்ளமையை கருத்திற் கொண்டு அந் நிலையங்கள் தற்காலிகமாக மூடியும் ஏனையவை இம்மாத இறுதிக்குள் சீர் செய்யுமாறும் அறிவு றுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் கடந்த வியாழன் அன்று பூநகரிப் பிரதேசத்திலுள்ள உண வகங்கள் பல்பொருள் வாணிபங்கள், பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், சந்தை என்பனவற்றில் ஆய்வு மேற்கொள்ளப் பட்டு பெருந்தொகையான மென்பா னங்கள், பால்மா, சுவிங்கம், டிஸ்பிறின் மருந்துப் பொருள், சமபோஸா, பிஸ்கற் என்பன கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப் பட்டுள்ளன. எனவே பொருட்களை கொள்வனவு செய்வோர்கள் காலா வதியான பொருட்கள், உணவுப் பொருட்களின் தரம் என்பனவற்றை கவனத்தில் கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகை விடுத்துள் ளார். (சோ)



பிரதான வீதியிலுள்ள முக்கிய வீதிக் கடவைகளில் பாதசாரிகள் வீதிகளை கடப்பதற்கு தமிழீழ நகரப் போக்குவரத்து காவல்துறையினர் துணை புரிவதனைப் படத்தில் காணலாம். (படம் – சோதி)

# முல்லையில் சிறு தொழிலாளருக்கு மானிய அடிப்படையிலான நிதியுதவி

(முல்லைத்தீவு)

முல்லைமாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தால் ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் நிதிப்புருவியில் 45 சிறு தொழிலாளர்களுக்கும் 40 தனித்து வாழும் வயோதிபர்களுக்கும் மானிய அடிப்படையிலான பண உதவி கடந்த வெள்ளிக்கிழமை அன்று வழங்கப்பட்டது. காலை 10.00 மணிக்கு முல்லைமாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இதில் மேசன், சிறுவியாபாரம் வெளியிணைப்பு இயந்திரத்திருத்துனர் ஆகியோருக்குத் தலா 15000 ரூபாவும் மீன்வியாபாரிகளுக்கு 10000 ரூபாவும் தச்சு வேலை, பெயின்ரிங்வேலை செய்வோருக்கு 20000 ரூபாவும் மானியமாக வழங்கப்பட்டது. அத்தோடு தனித்து வாழும் வயோதிபர்கள் 40 பேருக்கு இரண்டாம் கட்டமாக 3000 ரூபா வீதமும் வழங்கப்பட்டது. இதில் முல்லைமாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் மரியராசா, ஒக்ஸ்பாம் நிறுவனப் பிரதிநிதிகள் எனப்பலர் கலந்து கொண்டனர்(20)

# முல்லை தொழில்நுட்பக் கல்லூரியில் புதிய பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம்

(முல்லைத்தீவு)

முல்லை தொழில் நுட்பக்கல்லூரி யில் புதிய பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் 15.01.2006 இல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்லூரி அதிபர் க.வைரமுத்து தெரிவித்தார். 2006, 2007 காலப்பகுதிகளுக்கான புதிய பல பயிற்சி நெறிகள் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அதில் நில அளவை, நில அளவை வரைபடம் வரைதல், தொழில் சம்பந்தமான பொருட்கள் தயாரித்தல், நெசவு, பன்னவேலை, மீன்பதனிடுதல் உட்பட பத்துப் பயிற்சி நெறிகள் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளதா கவும் தெரிவித்தார். இதற்கான திட்ட முன்மொழிவு உலக கனேடிய நிறு வனத்திடம் கையளிக்கப்பட்டுள் ளதாகவும் தெரிவித்தார். இத்திட் டங்கள் தொடர்பாக கடந்த திங்கட் கிழமை அன்று திட்ட வெளிக்கள ஒருங்கிணைப்பாளர் ஜெயராஜசிங்கம் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றதாகவும் திட்ட முன் மொழிவுகள் இடம்பெற்ற தென வும் இதில் வூட்ஸ் நிறுவன இலங்கைக்கான பிரதிநிதி குலே, வூட்ஸ் கொழும்புப் பிரதிநிதி ஆறு முகம் ஆகியோர் உட்பட வடக் கிலுள்ள 12 அரசசார்பற்ற நிறு வனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டதாவும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## கண் சிகிச்சை முகாம் 250 பேர் பயனடைவு

(முல்லை)

அளம்பில் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையின் ஒழுங்குபடுத் தலில் நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினரும் இணைந்து கண் சிகிச்சை முகாம் ஒன்றினை கடந்த புதன்கிழமை அளம்பில் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் நடத்தி னர்.

இதில் வெளிநாட்டிலிருந்து வருகை தந்த கண்சிகிச்சை நிபுணர் கள் பரிசோதனைகளை நடாத்தி 250 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கிய தோடு கண் சிகிச்சையி னையும் மேற்கொண்டனர். இதில் அளம்பில் குமுழமுனை உப்புமா வெளிப்பிரதேச மக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். (20)

# நிரந்தர வீடுகளமைப்பதில் தாமதம்; எதிர்பார்த்திருந்த மக்கள் அவலம்

(அலுவலகசெய்தியாளர்)

குறித்த காலப்பகுதிக்குள் வீடுகளை அமைத்துக் கொடுக்காதத னால் பூவரசங்குளம் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வரு கின்றனர்.

பாண்டியன் குள கோட்டத்தில் அமைந்துள்ள பூவரசங்குள கிராம மக்களுக்கு அரச சார்பற்ற நிறுவன மொன்று நிரந்தர வீடுகளை அமைத் துக் கொடுக்க முன்வந்து ஒரு தொகுதி வீடுகளை அமைத்து கைய ளிக்கவுள்ளது.

அதே நிறுவனம் அடுத்த கட்டமாக வீடுகளை அமைப்பதற் கான பயனாளிகளைத் தெரிவு செய்து குறித்த காலத்தில் வீடுகளை அமைப்பதற்கான தயார்ப்படுத்தலை மேற்கொள்ளுமாறு மக்களிடம் கூறி யதற்கமைவாக தற்போது குடியிருந்த கொட்டகைகளையும் அகற்றி விட்டு நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான தயார்ப்படுத்தல்களை மேற் கொண் டனர். ஆனால் குறித்த காலத்தில் இவ் வீடுகள் அமைத்துக் கொடுக் கப்படாததால் தற்போது பெய்து வரும் மழையினால் தாம் பெரிதும் சிரமங் களை எதிர்நோக்கி வருவதாக அம் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். சம்பந்தப்பட்டவர்கள் விரைவாக வேலைத்திட்டங்களை ஆரம்பிப் பதாகக் கூறியுள்ளனர். இருப்பினும் அதற்கான தயார்ப்படுத்தல்களை இதுவரை மேற்கொள்ளவில்லை எனவே இவ் விடயத்தில் தொடர்பு டையவர்கள் விரைவாக தமது சிரமங் களைத் தீர்க்க முன்வர வேண்டு மெனவும் மக்கள் கேட்டுள்ளனர். (ச)

## மாலைநேர வகுப்புக்கு உதவி வழங்கல்

பொருண்மிய மதியுரையக அனு சரணையுடன் மன்னார் மாவட்ட மாண வர் அமைப்பின் ஏற்பாட்டில் விளாத் திக்குள அதக பாடசாலை மாணவர் களின் மாலைநேர வகுப்பிற்கு சூரியமின் கல தொகுதியொன்று வழங்கப்பட் டது.

இந் நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக விடுதலைப்பறவைகள் இசைக்குழு இசைக்கலைஞர்களின் இன்னிசை நிகழ்வும் இடம்பெற்றது.



மாவீரர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி தங்க நிலா நகை மாடத்தினரால் வாடிக்கையாளர்களிடையே நடாத்தப்பட்ட அதிர்ஷ்டம் பார்க்கும் நிகழ்வு நடாத்தப்பட்டு முதலாவது அதிர்ஷ்டசாலியாகத் தெரிவுசெய்யப்பெற்ற தாளையடியைச் சேர்ந்த திருமதி செல்லக்கண்மணிக்கு ஒரு பவுண் தங்க நாணயம் நகையகத்தினரால் வழங்கப்படுவதை படத்தில் காணலாம். இதில் பரந்தனைச் சேர்ந்த நிலா என்பவருக்கு 2ஆவது பரிசும், மூன்றாவது பரிசாக ஜெயந்திநகரைச் சேர்ந்த புஸ்பலீலாவுக்கும் வழங்கப்பட்டது. (படம்சோதி)

# மின்சார சிக்கனத்தைப் பேணுமாறு மின்பொறியியலாளர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

**யாழ். குடாநாட்டில் தற்பொழுது உள்ள சுழற்சி முறையிலான மின்வெட்டை தவிர்க்க பாவனையாளர்கள் மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என யாழ். பிராந்திய மின்பொறியியலாளர் அமுதலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

மாலை ஆறுமணி முதல் ஒன்பது மணி வரை மின்பாவனை அதிக அளவில் உள்ளதால் இந்த நேரத்தில் மின்பாவனை யாளர் கள் மின்பாவனையை மட்டுப் படுத்தி பயன்படுத்துவதாலும், வலுக் கூடிய மின்சாதனங்களை பயன்படுத்துவ தைத் தவிர்ப்பதுடன் வீடுகளில் அலுவலங்களில், கடைகளில் தேவை யற்ற விதமாய் ஒளிரும் மின் குமிழ் களைத் தவிர்ப்பதன் மூலமும் மின்சார சிக்கனத்தைப் பேணும்படி வேண்டுகோள் விடுத்துள்ளார். (28)

# மிருசுவில் மத்திய மருந்தகத்திற்கு நோயாளர் காவும் ஊர்தி அன்பளிப்பு

மிருசுவில் மத்திய மருந்தகத்திற்கு நோயாளர் காவும் ஊர்தி ஒன்றை வழங்குமாறு கோரி மருத்துவமனை அபிவிருத்திச் சபையினரும் இப் பிரதேச பொதுமக்களும் நீண்டகாலமாக வலியுறுத்தி வந்த நிலையில் தற் பொழுது இம் மக்களின் வேண்டுகோளுக்கமைய யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி மாகாண பணிப்பாளரினால் நோயாளர் காவும் ஊர்தி ஒன்று வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் மூலம் தென்மராட்சி பிரதேசத்தில் அதிகளவு மக்கள் செறிந்து வாழும் இப்பிரதேசத்தில் தமது மருத்துவத் தேவைகளை உரிய நேரத்தில் பூர்த்தி செய்ய வழியேற்பட்டு இருப்பதாவும், மக்களின் நியாயமான கோரிக் கைக்கு மதிப்பளித்த சகல தரப்பினருக்கும் தமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகவும் மருத்துவமனை அபிவிருத்திச் சபையின் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர். (28)

# மதிப்பீடு செய்யும் பணியில் கடற்றொழிலாளர் க.சங்கம்

யாழ். குடாநாட்டின் கரையோர பகுதிகளில் பனூஸ் புயல் காற்றினாலும் ஏற் பட்ட கடற்கொந்தளிப்பினாலும் சேதம் அடைந்த கடற்றொழில் உபக ரணங்கள் சேதம் அடைந்த வீடுகள் போன்றவற்றை இனங்கண்டு மதிப்பீடு செய்யும் பணிகளில் அப்பகுதி கடற்றொழிலாளர்கள் சங்கங்கள் ஈடுபட்டு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த பத்தாம் திகதி வீசிய பானூஸ் புயல்காற்றினால் வடமராட்சி உட்பட்ட குடாநாட்டின் கரையோரப் பகுதி மீனவர்கள் பாதிக்கப்பட்டிருப் பதால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு யாழ். அரச அதிபரிடம் வழங்கப்பட இருப்பதாக மீனவசங்கங்கள் தெரிவித்துள்ளன பனூஸ் புயல்காற்றினால் இலட்சக்கணக்கான ரூபா மதிப்புடைய சொத்துக்கள் இழப்பு ஏற்பட்டு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# தேர்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட தளபாடங்கள் ஒப்படைக்கப்படவில்லை

## பாடசாலைச் சமூகம் அதிருப்தி

சனாதிபதித் தேர்தலின் போது முகமாலை கொத்தணி வாக்குச் சாவடியில் பயன்படுத்தவென தென் மராட்சி வலயப்பாடசாலைகளில் இருந்து அதிகாரிகளினால் எடுத்துச் செல்லப்பட்ட மாணவர்கள் பயன் படுத்தும் கதிரை, மேசைகள் என்பன மீண்டும் பாடசாலைகளில் ஒப்படைக் கப்படாமை குறித்து பாடசாலைச் சமூகம் தனது அதிருப்தியை சம்பந் தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்ப டுத்தியுள்ளது.

ஏற்கனவே தளபாடப் பற்றாக் குறையுடன் இருந்து வரும் தென் மராட்சிப் பாடசாலைகளில் இருந்து ஒரு இலட்சத்து எண்பதாயிரத்து ஐநூறு ரூபா மதிப்புடைய தள பாடங்களே மீளத் தரப்படவில்லை யெனத் தெரியவருகின்றது. இத் தளபாடங்கள் அனைத்தும் முக மாலை பகுதியில் அமைக்கப்பட்ட கொத்தணி வாக்களிப்பு நிலையங் களிலேயே காணாமல் போய் இருப்ப தால் படையினர் இவற்றை தமது தேவைகளுக்காக எடுத்துச் சென்றி ருக்கலாம் எனத் தெரிவிக்கப்படு கின்றது. இத் தளபாடங்களை மீண் டும் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கு மாறு தலைமைத் தேர்தல் ஆணை யாளரிடமும் வேண்டுகோள் விடுக் கப்பட்டுள்ளது. (28)

# யாழ். மாவட்டத்தில் கால்நடை வளர்ப்போரை ஊக்குவிக்கும் கருத்தரங்கு

யாழ்ப்பாண மாவட்டத்தில் கால்நடை வளர்ப்பாளர்களை ஊக்குவித்தல், கால்நடை அபிவிருத்தி பால் பொருட்களின் தேவைகளை அதி கரித்தல், மக்களின் போசாக்கு, சந்தைப் படுத்தல் ஆகியன தொடர்பான முக்கிய கலந்துரையாடல் நிகழ்வு எட்டக்கச்சியில் அமைந்துள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன நடுவப்பணியக மாநாட்டு மண்டபத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன யாழ். மாவட்ட பொறுப்பாளர் க.சங்கர் தலைமையில் 12.12.2005 ஆம் திகதி இடம்பெற்றது. இந்நிகழ்வில் கருத்துக்கள் வழங்கும் போது தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் கருத்துத் தெரிவிக்கை யில்;

யாழ்ப்பாண மாவட்டத்தில் கால்நடை வளர்ப்பை ஊக்குவிப்பதற்கு கால் நடை அபிவிருத்தி சுகாதாரத் திணைக் களம் தகுந்த நடவடிக்கையை மேற் கொள்ள வேண்டும்.

அத்தோடு யாழ்.மாவட்டத்தில் இருக்கும் கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம், மற்றும் சமாசம் கால்நடை வளர்ப்பவர்களுக்கு ஏற்ற ஒழுங்கமைப்பை மேற்கொண்டு கால் நடை வளர்ப்பை ஊக்குவித்து மக்களின் போசாக்குத் தேவையைப் பூர்த்தி செய்து கால்நடை அபிவி ருத்தியை அதிகரிக்க வேண்டும்.

அத்தோடு அவர்களுக்கான சந்தை வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்தல் மிகவும் அவசியமானது. திணைக் களம் மானிய அடிப்படையில் நல் லின கால்நடைகளை கால்நடை வளர்ப்பாளர்களுக்கு வழங்குகிறது.

அத்தோடு பாலின் கொள்வனவு விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் கால்நடை வளர்ப்பாளர்கள் நன்மையடைவார்கள் என்றார்.

கருத்தரங்கில் யாழ்மாவட்ட கால் நடை அபிவிருத்தி சுகாதார திணைக் கள உதவிப் பணிப்பாளர் பி.இராம நாதன் மற்றும் யாழ்.மாவட்ட கூட்டு றவு அபிவிருத்தி உதவி ஆணை யாளர் செ.கனகசபை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் மற்றும் கால்நடை வைத்தி யர்கள் எனப் பலர் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இக் கலந்துரையாடல் நிகழ்வில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன துணைப் பொறுப்பாளர் சு.சின்னன்னை, திட்ட அலுவலர் கி.ஆறுமுகம் மற்றும் யாழ்.மாவட்ட திட்ட இணைப்பாளர், பிரதேச இணைப்பாளர்கள், கால்நடை வளர்ப் போர் கூட்டுறவுச்சங்க பிரதிநிதிகள், கால்நடை அபிவிருத்தி சுகாதார திணைக்கள வைத்தியர்கள் போதனா சிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (46)

# கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்க வறிய மாணவர்களுக்கு நிதியுதவி

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் வடக்கு கிழக்கு நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் வறிய மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்க எட்டு மாதங்களுக்கு மாதாந்தம் ஐநூறு ரூபா வழங்க முன் வந்திருப்பதாகத் தெரிய வருகிறது. நல்லூர் பிரதேச செயல கப் பிரிவில் உள்ள பெற்றோர்களை இழந்த குடும்பத்தில் தலைவரை இழந்த வறிய எழுபது மாணவர்களுக்கு இந்த நிதி அம் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் தொடராமல் இடையில் விடப்பட்டுள்ள கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்கவும், வழங்கப்பட இருப்பதாகவும் தெரியவருகிறது. (28)

# சுகாதார நடைமுறையை மீறும் உணவகங்கள் மீது கடும் நடவடிக்கை

யாழ்நகரப் பகுதியிலுள்ள உணவகங்கள், குளிரகங்கள், தேநீர் கடைகளில் சுகாதார நடைமுறைகளைத் தொடர்ந்து பின்பற்ற வேண்டும் என்று யாழ் மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சில உணவகங்களில் சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படுவதில்லை என்று பொதுமக்கள் தரப்பில் இருந்து முறைப்பாடுகள் கிடைத்திருப்பதால் சுகாதார நடைமுறைகளை மீறும் உணவகங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட இருப்பதாகவும் இவற்றை இனங்காணும் நடவடிக்கையில் தற்பொழுது பொது சுகாதார உத்தியோகத்தர்கள் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (28)




*யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கி, நடமாடும் இரத்த வங்கியை நடாத்தி வருகிறது. வடமராட்சியில் இரத்த சேகரிப்பில் ஈடுபட்ட போது.*

*(படம். காங்கேயன்)*

# கலாச்சார பேரவை எச்சரிக்கை

நல்லூர் செட்டித்தெரு வீதியால் செல்லும் பெண்கள் மீது அப்பகுதியில் கூடி நிற்கும் விசமிகள் சிலரால் நேரடியாக மேற்கொள் ளப்பட்டு வரும் அங்கச் சேட்டைகள் தொடர்பாய் யாழ் கலாச்சார பேரவையின் கவனத்திற்கு பொது மக்களால் முறைபாடுகள் பல கிடைத்துள்ளதை அடுத்து கலாச்சார பேரவை தமது கடும் எச்சரிக்கையினை விடுத்துள்ளது.

சமூக நலனுக்கும் கலாச்சார விழுமி யங்களுக்கும் எதிரான நடவடிக்கையில் ஈடுபடும் விசமிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இது குறித்து முறைபாடுகள் பல்வேறு இடங்களில் இருந்தும் தமக்கு கிடைத் திருப்பதுடன் கலாச்சார பேரவை தமது கவனத்தை இப் பிரச்சினையில் செலுத்தி இருப்பதாகவும் தெரிய வருகின்றது. (28)

# ஆலடி புனித சூசையப்பர் ஆலயத்தில் மீண்டும் பூசைகள் ஆரம்பம்

உடுவில் ஆலடி புனித சூசையப்பர் ஆலயத்தில் கடந்த ஒரு வருடங்களுக்கு மேலாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பூசைகள் மீண்டும் ஆலயத்தில் இடம்பெறத் தொடங்கி யுள்ளன.

ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள கள்ளுத் தவறணை மற்றும் அப் பகுதியில் உள்ள கசிப்பு விற்பனையாளர்க ளிடம் வருகின்ற வாடிக்கையாளர்கள் ஆலய சுற்றாடலை அசிங்கப்படுத்தி வந்துள்ளார்கள். தற்போது சிந்து சனசமூக நிலைய உறுப்பி னர்கள் மற்றும் அப்பகுதியில் உள்ள சமூக அபி விருத்தியில் ஆர்வம் கொண்ட இளைஞர்களும் மேற்கொண்ட பக்களிடத்திலான விழிப்புணர்வுச் செயற்பாடுகளைத் தொடர்ந்து மீண்டும் ஆலயத் தில் பூசைகள் இடம்பெறத் தொடங்கியுள்ளன.

# மகிந்தவின் நிலைப்பாட்டில் தடுமாற்றம்?

விடுதலைப்புலிகள் யுத்தமா சமாதானமா என்பதை தீர்மானிக்க சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு காலக்கெடு ஒன்றை நிர்ணயித்திருக்கும் வேளையில் மகிந்த ராஜபக்ஷ அவசர அவசரமாக ஜே.வி.பி,ஜாதிகஹெல உறுமய கட்சிக்காரர்களை ஆசுவாசப்படுத்தி நோர்வே அரசை மீண்டும் மத்தியஸ்தப்பணிகளில் ஈடுபடுமாறு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

கடந்த மாதம் 27ஆம் திகதி விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன் அவர்கள் தெரிவித்த கருத்தும் அதனைத் தொடர்ந்து ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தெரிவித்த கருத்தும் மீண்டும் இந்நாட்டில் ஒரு யுத்தம் ஏற்படுடுத்த நாட்களில் யாழ்ப்பாணத்தில் இரு கண்ணிவெடித்தாக்குதல்கள் நடந்து பல இராணுவத்தினர் பலியாகினர். இந்த நிலையில் சாந்த கொட்டேகொட,சரத் பொன்சேகா இருவரினதும் பதவிமாற்றங்கள் நடைபெற்ற நிலையில் இராணுவமும் தயார் நிலையில் இருக்கவில்லை.

இதன் காரணமாக சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ் தனது ஆலோசகர்களை அவசரமாக அழைத்து கலந்துரையாடி இராணுவத்தின் பலத்தைக் கட்டியெழுப்புவதன் அவசியம் தொடர்பாகவும் விடுதலைப்புலிகளிடம் பேசுவது தொடர்பாகவும் ஆராய்ந்தார். அதேநேரத்தில் ஜே.வி.பியையும் ஜாதிக ஹெலஉறுமயவையும் தனது வழிக்குக் கொண்டு வர வேண்டிய அவசியத்தையும் அவர் ஸ்ரீப... இவன்ஸ் யப்பானின் அக்கியோ சூட ஆகியோருடன் கலந்துரையாடி நோர்வேயின் மத்தியஸ்தம் அவசியம் என்பதையும் விளக்கியுள்ளார். இந்தக் கலந்துரையாடலின்போது யுத்தநிறுத்த உடன் படிக்கை பற்றியும் ஆராயப்பட்டது. அப்போது அதனை மீள் பரிசீலனை செய்வது பற்றிப் பேசப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதன்போது சமாதானச் செயலகத் தலைவர் ஜோன் செனவிரட்ன, வெளியுறவுச் செயலர் பன்னியக்கார, சனாதிபதியின் செயலர் லலித் வீரசிங்க ஆகியோரும் சமுகமளித்தனர். அப்போது விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால சபைக்கான இறுதித்தீர்வுக்கான பேச்சு நடத்தவிரும்புவதாகவே மகிந்த தெரிவித்தார். இதற்கு தாகத் தெரிகிறது. ஜே.வி.பி யினரின் வீதிப் போராட்டமும் காணப்படவில்லை.

மேலும் நோர்வே அரசு 2002 ஆம் ஆண்டு முதல் 2003ஆம் ஆண்டு வரை நடைமுறையிலிருந்த சமாதான உடன்படிக்கைக்கு அமைவாக பேச்சு நடத்துவதா என சிறிலங்கா அரசை கோரவிருக்கின்றது. நோர்வேக்கு மகிந்த தனது ஆதரவைத் தெரிவித்தால் ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமயவினரின் ஆதரவை மகிந்த பாராளுமன்றில் இழக்க நேரிடும்.

எனினும் தற்போது ஜே.வி.பி யும் ஜாதிக ஹெலஉறுமயவும் தமது எதிர்ப்பிலிருந்து சற்றுத்தணிந்துள்ளன, காரணம் முன்னர் கூறியது போன்று சிறிலங்கா இராணுவக்கட்டமைப்பின் குறைபாட்டையும் ஆயுதப்பற்றாக்குறை பற்றியும் மகிந்த அவர்களுக்கு விளக்கிக் கூறியிருப்பதாகும்.

வதற்கான அறிகுறியைத் தெரிவித்துள்ளன.

விடுதலைப்புலிகளைப்பொறுத்தவரை தற்போதைய அரசாங்கத்தின் அச்சாணியாக விளங்கும் தீவிரபோக்குடைய ஜே.வி.பி யும் ஜாதிகஹெல உறுமயவும் மகிந்தவுக்கு விடுத்துள்ள நிபந்தனைகள் மீண்டும் யுத்தத்தை ஆரம்பித்து தனியரசொன்றை ஏற்படுத்தும் மார்க்கமாகக் கருதுகின்றனர். அதனால் மகிந்தவுக்கு காலக்கெடு ஒன்றையும் வழங்கியுள்ளனர்.

இது இவ்வாறாக சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜே.வி.பி,ஜாதிகஹெல உறுமயவின் நிலைப்பாட்டினால் மனம் உடைந்துபோன நோர்வே அரசை ஒற்றையாட்சியின் கீழான தீர்வு என்பதை விடுத்து மீண்டும் முன்னைய சந்திரிகாவின் ஐக்கிய முன்னணி அரசின் ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு என்ற ரீதியில் பேச்சு நடத்த மத்தியஸ்தம் வழங்க வருமாறு கேட்டுள்ளார்.

விடுதலைப்புலிகளும் சமஷ்டித் தீர்வு ஒன்றுக்கான நோக்கத்திலேயே ரணிலை தேர்தலில் தோல்வியுறச்செய்து மகிந்தவை சனாதிபதியாக்கினர்.


கடந்த நான்காம் திகதியும் தலைவர் பிரபாகரன் சிறிலங்கா அரசிற்கு என்ன கூறியிருக்கிறார் என்பதை விடுதலைப்புலிகளின் மூத்தஉறுப்பினர் பாலகுமாரன் தமிழீழ வானொலி மூலம் மீண்டும் சுட்டிக்காட்டியிருந்தார். அவர் தனது உரையில் தமிழ்மக்களின் ஐக்கியம் வீணாகக்கூடாது என்றும் சிங்கள அரசின் கடும்போக்கை முறியடிக்க அனைவரும் ஒன்று திரளவேண்டும் என்றும் சிங்கள அரசு பேச்சுவார்த்தை மேசைக்கு அழைப்பதை நிராகரிக்க வேண்டும் என்றும் தயவு செய்து மக்களே கவனியுங்கள் இறுதிப்போருக்கு இதுவே தருணம்,யுத்தம் ஆரம்பித்து விட்டது எமது உரிமையை நாமே பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்திருந்தார்.

அவர் அவ்வாறு கூறிய அடுத்த

உணர்ந்தார். அத்துடன் மங்கள சமரவீரவையும் இந்தியாவுக்கு அனுப்பி இந்தியாவின் நிலைப்பாடு பற்றியும் அறிய வேண்டியேற்பட்டது. இந்தியா ஐக்கிய இலங்கைக்குள் நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் தீர்வு காணப்பட வேண்டும் என்ற தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியது.

இந்த நிலையிலேயே மகிந்த ராஜபக்ஷ முதலில் சிறிலங்காவின் அனைத்து இடதுசாரிக்கட்சிகளையும் வரவழைத்து அவசரமாக மாநாடொன்றை நடத்தினார். அவர்களிடம் நாட்டில் தற்போது வெடித்துள்ள புதிய பிரச்சினைகளை எடுத்துக்கூறி அதனால் நாடு முழுவதும் சந்திக்கப்போகும் இழப்புக்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். அதன் பின்னர் ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய கட்சிகளிடம் விளக்கிக்கூறி விடுதலைப் புலிகள் யுத்தத்தை ஆரம்பித்தால் இராணுவத்தினர் அதற்கு முகம் கொடுக்கக் கூடிய ஆயுததளபாடவசதியின்மை பற்றி விளங்கியதுடன் சர்வதேச சமூகம் கூறும் வழிகளைப் பின்பற்றவேண்டிய அவசியத்தையும் விளங்கியுள்ளார். அத்துடன் விடுதலைப்புலிகளுடன் யுத்தத்தை ஆரம்பிக்க வேண்டுமாயின் அதற்கு வெளிநாடுகளிலிருந்து ஆயுதத்தளபாடங்களைக் கொள்வனவு செய்யவேண்டும் என்பதையும் அதற்கு பல மாதங்கள் தேவைப்படும். என்பதையும் கூறியுள்ளார். அத்துடன் ஈரானில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆயுததளபாடங்கள் போருக்கு முகம் கொடுக்கபோதுமானவையல்ல என்பதையும் விளக்கியுள்ளார். இந்த வகையில் போர் ஒன்று தேவைப்படாது என்பதை விளக்கி பேச்சுவார்த்தைமூலமே தீர்வு காணப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி அவர்களை இணக்கப்பாட்டுக்குக் கொண்டு வந்துள்ளார்.

அது முடிந்த கையுடன் மகிந்த கடந்த ஏழாம் திகதி நோர்வேத்தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர், அமெரிக்காவின் ஜெப்ரி லன்ஸ்டட் பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகர்



நன்றி :- லங்காதீப

ஜே.வி.பி, ஹெல உறுமயவினர் மறுப்பதையும் அவர்களுக்கு எடுத்துக்கூறினார்.

அது புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக சபைக்கான ஒரு இணக்கப்பாடு எட்டப்பட வேண்டிய பேச்சு மட்டுமே என்றும் மகிந்த கூறியுள்ளார். மேலும் அவர் தெரிவிக்கும்போது இறுதித் தீர்வுக்கான பேச்சுக்கான காலவரையறையை ஏற்படுத்தும் ஒரு பேச்சாகவே இருக்கும் என்றும் கூறியுள்ளார்.

அத்துடன் இறுதித்தீர்வுக்கான அடிப்படைப் பேச்சுக்கள் மூலம் புலிகளுக்கு ஒருஅதிகாரம் அளிக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். எனினும் அது ஐக்கிய இலங்கைக்குள்ளான தீர்வா ஒற்றையாட்சியின் தீர்வா என்பது பற்றிக் குறிப்பிடவில்லை.

அதேவேளை பிரசல்சில் அல்லது பெல்ஜியத்தில் சமாதான முன்னெடுப்புக்கான வெளிநாட்டுப் பிரதிநிதிகள் குழு 19ஆம்திகதி (இன்று)சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளது. அச்சந்திப்பில் கிறிஸ்டினா றோக்கா, ஐரோப்பிய ஒன்றிய ஆணையாளர் பெரரோவோனர், யசூசி அகாசி ஆகியோர் கலந்து கொள்வர் என எதிர் பார்க்கப்படுகின்றது.

இந்த சந்திப்புக்கான ஆயத்தம் நடைபெறும் வேளையில் ஐரோப்பிய ஒன்றிய ஆணையாளர் தனது செயலாளரை சிறிலங்காவுக்கு அனுப்பி அங்குள்ள நிலைமை பற்றி ஆராயுமாறு தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் ஜே.வி.பி யின் முக்கிய உறுப்பினர்களான சோமவன்ச அமரசிங்கவும் விஜிதஹேரத்தும் சந்தித்துரையாடி சனாதிபதி மகிந்தராஜபக்ஷவின் முடிவு எவ்வாறிருக்கும் எனப் பார்த்துக் கொண்டுள்ளனர். யுத்தநிறுத்த உடன்பாடு நாட்டுக்கு பெரும் நஷ்டம் என்று தெரிவிக்கும் அவர்கள், ராஜபக்ஷவின் அடுத்த கட்ட நடவடிக்கை யாது என அவதானித்து வருகின்றனர்.

நோர்வே அரசு இவர்களுக்குள் ஏற்பட்டுள்ள இழுபறிநிலை முடியும் வரை மத்தியஸ்தம் தொடர்பான தனது முடிவை அறிவிக்காமல் உள்ளது. அது மத்தியஸ்தம் வகிக்க வேண்டும் என நினைத்தால் ராஜபக்ஷவின் அரசு சில நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட வேண்டும் எனக் கூறுகிறது. நோர்வேயின் இந்த நிலைப்பாட்டினாலும் விடுதலைப் புலிகளின் அண்மைய காய் நகர்த்தலின் மூலமும் சனாதிபதியும் ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமயவினரும் வாயடைத்துப் போயுள்ள

விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு பற்றிக் கூறுவதானால் அவர்கள் முன்னர் செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை மீள் பரிசீலனை செய்வதை நிறுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளனர். எனினும் மகிந்த ராஜபக்ஷ தனது சகாக்களுடன் பேசி அதில் ஏதும் தவறுகள் இருப்பின் திருத்திக் கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை மகிந்த யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என உறுதியாக இருந்தால் சமாதானப் பேச்சுக்கள் ஸ்தம்பிதமடைவதுடன் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுவதற்கான ஏது நிலையும் தோன்றிவிடும்.

அவ்வாறு யுத்தம் ஒன்று ஏற்படுமானால் மகிந்தவின் படைகள் யுத்தம் புரிவதற்கான ஆயுத தளபாடங்களை கொள்வனவுசெய்து தயார்ப்படுத்த விடுதலைப்புலிகள் அவகாசம் அளிக்க மாட்டார்கள்.

மேலும் அரசு விடுதலைப்புலிகளிடம் நம்பிக்கைத் தன்மையையும் இழந்துள்ளனர். அத்துடன் கருணாகுழுவினர்

சுரணிமல.
(சண்டே லீடர்),
தமிழில் வடிவேல்.

கிழக்கில் இராணுவத்தினருடன் இணைந்து முஸ்லிம்களைக் கொலை செய்வதையும் கண்டித்து வருகின்றனர்.

கருணா குழுவினர் இராணுவத்துடன் இணைந்து செய்யும் கொலைச் சம்பவங்களை அங்கிருந்து தப்பி வந்தவர்கள் நேரடியாகவும் தெரிவித்துள்ளனர்.

உயர் பாதுகாப்பு வலயத்தில் வாழும் விடுதலைகோரும் படையும் அங்கிருந்து இராணுவம் அகற்றப்படா விட்டால் தனது தாக்குதல்கள் தொடரும் என அறிவித்துள்ளது. அது அண்மைக் காலமாக நடத்தி வரும் தாக்குதல்களையும் கொல்லப்பட்ட இராணுவத்தினர் பற்றியும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இவ்வாறான நிலைப்பாடுகளால் அரசு சாதகமான நடவடிக்கை எடுத்து மக்களின் வாழ்வைப் பாதுகாக்கத் தவறினால் அவர்களின் உரிமைக்கு முன்னுரிமை யளிக்காத பட்சத்தில் சமாதானம் மறைந்து யுத்தமே ஆரம்பமாகும்.




# 08.12.2005
# 14-12.2005

**08**

☐ சீனத் தலைநகர் பீஜிங்கிலிருந்து 164 கிலோமீற்றர் தொலைவிலுள்ள வியுகுவாந்தன் நிலக்கரிச் சுரங்கத்தில் எரிவாயு சிலிண்டர் வெடித்ததில் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 74 தொழிலாளர்கள் பலி.

☐. இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்ட நோர்வே நாட்டுப் பிரதமர் ஜென்ஸ் ஸ்டோல் டென்பேர்க் டில்லியில் குடியரசுத் தலைவர் அப்துல்கலாமை சந்தித்துப் பேசினார்.



☐ ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தின் மத்திய பகுதியில் பேருந்து ஒன்றில் இடம் பெற்ற தற்கொலை குண்டுத்தாக்குதலில் 30 பேர் பலி.

☐ சீலகிழக்குக் கடற்பிராந்தியத்தில் மீன் பிடிப்படகொன்று மூழ்கி விபத்திற்குள்ளானதில் 17 பேர் காணாமல் போயுள்ளனர்.

☐. வடபங்களாதேஷ் நகரொன்றில் இரு குண்டுகள் வெடித்ததில் ஐந்து பேர் பலி 50 இற்கும் மேற்பட்டோர் காயம்.

**09**

☐ சிக்காக்கோ விமான நிலையத்தில் ஜெட் விமானமொன்று இறங்க முற்பட்ட சமயம் விபத்திற்குள்ளானதில் ஆறு வயதுச் சிறுவன் பலி. மேலும் 10 பேர் காயம்.



விபத்துக்குள்ளான விமானம்

☐ ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் குறித்து ஆராயும் மாநாடு கனடா மொன்றியல் நகரில் இடம்பெற்றது.




**10.**

☐ ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற மூன்று வெவ்வேறு தாக்குதல்களில் ஒன்பது பேர் பலி.




☐. பிரான்ஸ் நாட்டின் ஐடோன் சிறையிலிருந்து மூன்று கைதிகள் உலங்குவானூர்தி மூலம் மீட்டுச் செல்லப்பட்டனர்.

**11**

☐ லண்டனின் வடக்குப் பகுதியில் ஹெர்ட் போர்டு ஷெயர் நகரிலுள்ள பன்ஸ்பீல்டு எண்ணெய்க் கிணற்றில் இடம்பெற்ற வெடிப்புக்களால் எண்ணெய்க் கிடங்குகள் எரிந்தன. இதன் போது 36 பேர் காயமடைந்தனர். கட்டடங்கள் பலவும் சேதம்.

☐ அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் உள்ள கடற்கரையில் இடம்பெற்ற வன்முறையின் காரணமாக 25 பேர் காயம் வன்முறையில் ஈடுபட்ட 16 பேர் கைது.



**12**

☐ பப்புவா நியூகினி தீவின் தலைநகர் போட் மோர் சிபி நகரிலிருந்து 395 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள வடகிழக்குப் பகுதியில் திடீரென்று நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவு கோலில் 6.5 புள்ளியாக பதிவானது. இதன் காரணமாக கட்டடங்கள் அதிர்ந்தன.

☐ பாகிஸ்தானின் லாகூர் நகரத்தில் பேருந்து ஒன்றின் எரிபொருள் தாங்கி வெடித்துச் சிதறியதில் 40 பேர் பலி. 10 பேர் காயம்.

☐ சிலி நாட்டில் சனாதிபதித் தேர்தல் நடைபெற்றது.

**13**

☐ ஹொங்கொங்கில் உலக வர்த்தக அமைப்பின் வருடாந்த உச்சிமாநாடு நடைபெறும் மண்டபத்தின் முன் பாரியளவிலான எதிர்ப்பு ஆர்ப்பாட்ட ஊர்வலம் இடம்பெற்றது.


மண்டம்முன் எலும்புக்கூடுகள்

☐ ஆப்கானிஸ்தானில் வடகிழக்குப் பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டதில் வீடுகள் அதிர்ந்தன. மக்கள் வீடுகளைவிட்டு வெளியேறினார்கள். இந் நிலநடுக்கம் ரிச்டர் அளவு கோலில் 6.7 புள்ளியாகப் பதிவானது.

☐பசுபிக் கடல் பகுதியிலுள்ள பீஜிதீவில் இரு தடவை நிலநடுக்கம் ஏற்பட்டது. சுனாமிப் பீதியினால் மக்கள் இடம்பெயர்ந்தனர். இது ரிச்டர் அளவுகோலில் 6.84 புள்ளியாகப் பதிவானது.

☐ இந்தியா- ஆசியான்நாடுகளின் நான்காவது உச்சி மாநாடு மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் இடம்பெற்றது.

☐ஆசியன் உச்சி மாநாட்டில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற கோலாலம்பூர் சென்ற இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் யப்பான் பிரதமர் யுனிசுரோ கொய்சுமியைச் சந்தித்துப் பேசினார்.

☐உலக வர்த்தக அமைப்பின் மாநாடு ஹொங்கொங்கில் நடைபெற்றது.

☐ ஈராக் தலைநகர்பாக்தாத்தின் வடமேற்கே இடம்பெற்ற குண்டு வெடிப்பில் நான்கு அமெரிக்க வீரர்கள் பலி பிஸ்ஹுார் அல் துலைமி என்ற சன்னீ முஸ்லிம் அரசியல்வாதி ஒருவர் ரமாடியில் சுட்டுக் கொலை.

**14**

☐

அமெரிக்காவின் நியூ ஜெர்சி பகுதியிலுள்ள எண்ணெய்க்குழாய் திடீரென்று வெடித்தது. இதன்போது அப் பகுதியிலிருந்த எரிவாயுக் குழாயும் வெடித்ததில் அங்கிருந்த அடுக்குமாடிக் குடியிருப்பு தீப்பிடித்து எரிந்தது. இதில் ஐந்து பேர் உடல் கருகிப் பலி; 58 பேர் காயம்.

☐ புதுடில்லி உத்தராஞ்சல் மற்றும் பத்திரிநாத் பகுதிகளில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவு கோலில் 5.2 புள்ளியாகப் பதிவானது.

☐காஷ்மீரின் பட்காம் மாவட்டத்தில் படையினருக்கும், தீவிரவாதிகளுக்குமிடையே இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் ஆறு தீவிரவாதிகள் சுட்டுக்கொலை.

# சின்னவலயன்கட்டில் வீரமுரசு நிகழ்வு

மன்னார் சின்ன வலயன்கட்டு அ.த.க பாடசாலையில் கடந்த 16ஆம் திகதி மாலை 7.00 மணிக்கு பாடசாலையில் வீரமுரசு நிகழ்வு நடைபெற்றது.

இதில் முதல் நிகழ்வாக பொதுச் சுடரினை சின்ன வலயன் கட்டு கிராமத்தைச் சேர்ந்த மாவீரர் கப்டன் சுயந்தனின் தாயார் ஏற்றினார். அதனைத் தொடர்ந்து அகவணக்கம் இடம்பெற்றது. தலைமையுரையினை மன்னார் மாவட்ட கொள்கை முன்னெடுப்பு பிரிவு பொறுப்பாளர் ..... நிகழ்த்தினார்.

இந் நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இனியவன், மனனார் மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் ஒளிவளவன் மற்றும் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் வேங்கை, மன்னார் மாவட்ட த.பு.க பணிப்பாளர் கேசவன் ஆகியோரும் பங்கு பற்றினர்.

இதனைத் தொடர்ந்து சின்ன வலயன் கட்டு பாடசாலை மாணவரின் கலை நிகழ்வுகள் இடம் பெற்றன. அத்தோடு மன்னார் மாவட்டத் துணைப்பொறுப்பாளர் அருந்தவம் ஆரம்ப கால அரசியல் நிலைமை பற்றியும் தற்கால அரசியல் நிலைமைகளில் மக்கள் எவ்வாறு கலந்து கொள்ள வேண்டும் என்பது பற்றியும் விளக்கிக் கூறினார்.

## சுகாதாரக் கருத்தரங்கு

(அலுவலக செய்தியாளர்)

ஒட்டுசுட்டான் கற்சிலை மடுப் பிரதேசத்திலுள்ள தியாக தீபம் திலீபன் மருத்துவமனையில் நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் அநுசரணையுடன் தமிழீழ சுகாதார சேவையினரால் இன்று சுகாதாரக் கருத்தரங்குகளும், பற்சிகிச்சைப் பிரிவின் பற்சிகிச்சையும், மற்றும் வாய்ப்புற்றுநோயை இனங் காணும் நடவடிக்கைகளும் இடம் பெறவுள்ளது.

எனவே அப் பிரதேச வாழ் மக்கள் அனைவரையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் காழுவியன் வேண்டியுள்ளார். (சோ)

# வாழ்வோதய அமைப்பின் 5ஆம் ஆண்டு நிறைவு விழா

(மன்னார்)

மன்னார் வாழ்வோதய கிராமிய விழிப்பூட்டல் பிரிவின் ஐந்தாம் ஆண்டு நிறைவு விழா வெகு விமர்சையாக மன்னார் நகர மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு மன்னார் வாழ்வோதய நிறுவன இயக்குனர் அருட்தந்தை யேசுராசா அடிகளாரின் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக மன்னார் மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையும் சிறப்பு விருந்தினராக மன்னார் பிரதேச செயலாளரும் கலந்து கொண்டனர். இந் நிகழ்வில் வாழ்வோதய கிராமிய விழிப்பூட்டல் பிரிவினரும் கிராமிய குழுத்தலைவர் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர். வவுனியா மன்னார் பிரதேசத்தில் 132 வாழ்வோதயக் குழுக்கள் இயங்கி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (18)

# முல்லை தொழில் நுட்பக் கல்லூரியில் மூன்று பயிற்சி நெறிகள் நிறைவு

முல்லைத்தீவு மாவட்ட தொழில் நுட்பக் கல்லூரியில் 2005இல் ஆரம்பமான பயிற்சிகளில் மூன்று பயிற்சிகள் நிறைவடைய உள்ளதென கல்லூரி அதிபர் க.வைரமுத்து தெரிவித்தார்.

இதில் வீட்டு மின் இணைப்பு நிறைவடைந்து மூன்று மாதங்கள் வேரிக்களத் தொழில் பயிற்சிக்காக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் தையல், மின்சாதன இணைப்பு பாடத்திட்டங்கள் முடிவடையாமையினால் ஒரு மாதகாலம் கற்கை நெறி நீடித்துள்ளதாகவும், படகு வெளியிணைப்பு இயந்திரத்திருத்தம் 2006 மாசி முடிவடைந்து மூன்று மாதகாலம் வெளிக்களப் பயிற்சி நடைபெற வுள்ளதெனவும் அவர் தெரிவித்தார். (20)

# தமிழின ஒடுக்கு முறைக்கு எதிராக மலையகம் கிளர்ந்தெழ வேண்டும்

## ம.தொ.மு ஆலோசகர் அழைப்பு

மலையகத்தமிழ் மக்களின் ஒடுக்குமுறைக்கெதிரான கிளர்ந்தெழும் சக்திகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அப்படியான நிலை ஏற்படும்போதுதான் மலையகத் தமிழ்ச் சமூகத்துக்கு விடிவு கிடைக்கும் இவ்வாறு மலையக தொழிலாளர் முன்னணியின் ஆலோசகர் திலக்ராஜ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:-

மலையகத்தமிழ்ச் சமூகம் சகல வழிகளிலும் ஒடுக்கப்பட்ட சமூகமாகவுள்ளது. இந்த ஒடுக்குமுறைகளுக்கு எதிராக அவ்வப்போது மலையகத்தில் பல்வேறு சக்திகள் குரல் எழுப்புகின்றன. இந்த சக்திகள் தமது எதிர்ப்பைக் காட்டி விட்டு மறைந்து விடுகின்றன. ஆனால் இந்தச் சக்திகள் ஒன்றிணைந்து எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும். அவர்கள் ஆக்கச் செயற்பாடுகளிலும் ஈடுபட முன் வரவேண்டும். மலையகத்தில் புத்திஜீவிகள் என்ற போர்வையில் பத்திரிகைகளில் பல்வேறு அறிக்கைகள் வெளிவருகின்றன.

ஆனால் இந்தப் புத்திஜீவிகள் யார் என்பது மக்களுக்குத் தெரியாது. இந்த புத்திஜீவிகள் தேர்தலில் இவருக்கு வாக்களியுங்கள். அவர்களுக்கு வாக்களிக்காதீர்கள், அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளுங்கள் என்று அறிக்கை விடுகின்றார்கள். ஆனால், இவர்களின் முகங்களை மலையகத் தமிழ் மக்கள் பார்த்ததில்லை. ஆகவே, மலையகப் புத்திஜீவிகள் என்று கூறிக் கொள்வோர் தம்மை அடையாளப் படுத்திக் கொண்டு கருத்துச் சொல்ல முன்வர வேண்டும் என்றார்.

# அடிக்கல் நாட்டு விழா

பூநகரி பள்ளிக் குடாக் கிராமத்தில் உள்ள கண்ணாவில் அ.த.க பாடசாலையில் புதிதாக நிகொட் திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா நிகழ்வு அதிபர் ரி.சிவநாதன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வைபூநகரி பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் இராசன் ஆரம்பித்து வைக்க, தொடர்ந்து பூநகரி வைத்திய அதிகாரி, சிவகுமாரவேல் பிரதேச எழுச்சி செயலாளர் பொன் தில்லைநாதன், வர்த்தக சங்கத் தலைவர் பொ.ரவிச்சந்திரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், தி.கணபதிப்பிள்ளை கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் யோ. பிரான்சிஸ், கிராம அலுவலர் தவராசா கி. அபிவிருத்திச்சங்க தலைவர் வ. இராசலிங்கம், கமக்கார அமைப்பு சின்னத்தினி வளர்மதி கடற்றொழில் சங்கத்தைச் சேர்ந்த தணிகாசலம்பிள்ளை பள்ளிக்குடா கடற்றொழில் சங்கத்தைச் சேர்ந்த சிவலிங்கம் ஆகியோர் நாட்டினர். அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். (34)

## வடக்கு கிழக்கு மாகாண சபை
## வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்டம் (நீகோட்)
## மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு
## ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

# விண்ணப்பம் கோரல்

திருகோணமலை வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்ட முகாமைத்துவ காரியாலயத்தில் கீழ்க்காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பொது நிபந்தனைகள்**

நியமனங்கள் திருப்திகரமான சேவை அடிப்படையில் வருடாந்தம் புதுப்பிக்கப்படக்கூடிய ஒப்பந்த அடிப்படையிலானதாகும். அவ்வொப்பந்தம் திருப்தியடிப்படையில் மேலும் நீடிக்கப்படும். திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு வடக்கு கிழக்கு மாகாணங்களில் அதிகளவு பயணம் செய்யவேண்டியேற்படும்.

**வயதெல்லை**

55 வயதிற்கு குறைந்தவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பதாரிகள் அவர்களது கல்வித்தகைமை, தொழில்சார் தகைமைகள், பிறந்த திகதி, முன்னைய தொழில் விபரங்கள், முன்னைய அனுபவம், இரண்டு சான்றுபகர்வோர்களின் பெயர்கள், முகவரிகள், சுய தரவுகள் மற்றும் சான்றிதழ்களின் பிரதிகள் உட்பட விண்ணப்பத்தினை அவர்களாகத் தயாரிக்க வேண்டும். விண்ணப்பம் பதிவுத்தபால் மூலம் 2005.12.28ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் **திட்டப் பணிப்பாளர், வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NECORD)** 55இ, கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலை என்ற முகவரியில் கிடைக்க வேண்டும். அரச திணைக்களம் / அரசகூட்டுத்தாபனங்கள் / சபைகள் என்பவற்றில் சேவையிலிருப்போர் அவர்களது நிறுவனத் தலைவரினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.

**தெரிவு செய்யப்படும் முறை**

தகைமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட குறுகிய அட்டவணையிலிருந்து நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

**பிரதித் திட்டப்பணிப்பாளர் (01 வெற்றிடம் திட்ட முகாமைத்துவ காரியாலயம் )**

**கடமைகளும் பொறுப்புகளும்**

விசேடமாக இதற்குப் பொறுப்புடையவர் பின்வரும் விடயங்களில் திட்டப் பணிப்பாளருக்கு உதவ வேண்டும்.

- திட்ட முகாமைத்துவப் பிரிவினை திறமையாக முகாமைத்துவப்படுத்தல், அதன் நடவடிக்கைகள் மற்றும் செயல் நிறைவேற்று மதிப்பீடு என்பவற்றுக்கு ஒத்துழைத்து மேற்பார்வை செய்தல்.
- திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தலுடன் தொடர்புடைய முறைகள் மற்றும் நடவடிக்கைகளை திறமையாக ஏற்பாடு செய்தல் மற்றும் விருத்தி செய்தல். திட்ட நடவடிக்கைகளின் செயற்பாடுகளில் ஒத்துழைத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
- நடைமுறைப்படுத்தலின் போது ஏற்படும் பிரச்சினைகளை உடனே கண்டு அதற்கான தீர்வு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளல்.
- திட்ட நடைமுறைப்படுத்தலுடன் சம்பந்தப்பட்ட வெளிநாட்டு நிதி முகவரகங்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களுடன் கிட்டிய நட்புறவினை ஏற்படுத்தி பேணி வர வேண்டும்.
- திட்டப் பணிப்பாளரின் வேண்டுகோளின்படி வழங்கல் ஆவணம் மற்றும் அறிக்கைகள் தயாரிக்க வேண்டும்.

**தேவையான தகைமையும் அனுபவமும்**

பொறியியல், விஞ்ஞானம்; சட்டம், பொருளியல், வர்த்தகம், விவசாயம், வியாபார நிர்வாகம் / முகாமைத்துவம், கணக்கியல் அல்லது வேறு ஏதாவது துறையில் பட்டமொன்றுடன் வெளிநாட்டு நிதி நிறுவனங்களினால் நிதியிடப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் சிரேஷ்ட முகாமைத்துவத் தரத்தில் 08 வருடங்களுடன் 12 வருட அனுபவம் பெற்றிருத்தல் விரும்பத்தக்கது.

**அல்லது**

குறிப்பிட்ட துறையில் பட்டம் மற்றும் பட்டப்பின் படிப்பு தகைமை (கலைமாணி / டிப்ளோமா) அல்லது குறிப்பிட்ட துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றின் கூட்டு அங்கத்துவத்துடன் வெளிநாட்டு நிதி முகவரகங்களில் நிதியிடப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதில் 05 வருடங்கள் உட்பட 08 வருடங்கள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**தொழில்சார் திறமைகள்**

- சிக்கலான மற்றும் மாறுபட்ட நடவடிக்கைகளுடனான திட்டங்களைத் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கான திறமை.
- திட்டத்தின் நீண்டகால நீடித்த தன்மையை உறுதி செய்வதற்கான திறமையான நடைமுறைப்படுத்தலுக்கு பங்குதாரர்களின் பங்களிப்பு மற்றும் ஒத்துழைப்பு என்பனவற்றை ஊக்குவிப்பதற்கான திறமை.
- பலதரப்பட்ட ஒழுக்காற்று குழுக்களின் வேலைகளைத் திறமையாக ஏற்பாடு செய்து முன்னெடுத்துச் செல்லும் திறமை.
- திட்ட நடைமுறைப்படுத்தல் விடயங்களை ஆராய்ந்து தீர்ப்பதற்கான திறமை.
- திறமையான தொடர்பாடல் மற்றும் கலந்தாலோசிக்கும் திறமை மற்றும் சிறந்த தனிப்பட்ட தொடர்புகள் இருத்தல் வேண்டும்.
- அரசாங்க நடைமுறைகள் மற்றும் விதிகள் பற்றி போதிய அறிவுடையவராயிருத்தல் வேண்டும்.
- கணனி அறிவு பெற்றிருத்தல்.
- ஆங்கிலத்தில் எழுதவும் கதைப்பதற்கும் உயர் மட்டத் தேர்ச்சி இருத்தல்.

**சம்பளம்**

2000.12.26ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம் இல. 10 இன் 05 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் விண்ணப்பதாரியின் தகைமைகள் மற்றும் அனுபவத்தினடிப்படையில் பேசித் தீர்மானிக்கப்படலாம்.

**நிதி முகாமைத்துவ நிபுணர் (01 வெற்றிடம் திட்ட முகாமைத்துவ காரியாலயம் )**

**கடமைகளும் பொறுப்புகளும்**

கணக்கீட்டு நடைமுறைகள் உள்ளக கட்டுப்பாடு உட்பட நிதி முகாமைத்துவ நடைமுறைகளை நிறுவுதல் அவற்றை பேணுதல் திட்டமிடுதல், பாதீடு, நிதி அறிக்கையிடும் நடைமுறைகள் , கணக்கீட்டு நடைமுறைகள் உட்பட பின்வருவன தொடர்பாக திருப்திகரமான நிலைப்பாட்டினைப் பேணுதல்

- ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளை பிரதிபலிக்கக்கூடியதாகவும் தொழிற்பாடுகள் தொடர்பாகப் பிரத்தியேக வழிகாட்டல்களுக்கமைய எடுக்கப்பட வேண்டிய நடைமுறைகள் பற்றியும் திட்டத்திற்கான வளங்களை செலவீனங்கள் மேற்கொள்வது தொடர்பாகவும் அறிவுரைகள் வழங்குதல்
- திட்டத் தொழிற்பாடுகளை முகாமைத்துவப்படுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் ஏதுவாக சரியானதும் உரிய நேரத்திற்கு அவசியமானதுமான தகவல்களை வழங்குதல்
- கணக்கணி தகைமையை உறுதி செய்வதுடன் திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதி வளங்களை திறமையான பயன்பாட்டிற்கு வழியமைத்தல்

**தேவையான தகைமையும் அனுபவமும்**

- நிதி முகாமைத்துவக் கணக்கீடு தொடர்பான உயர்பட்டதாரி (MBA/MA) அல்லது அதற்கு சமமான தொழில்சான்றிதழ் (உதாரணமாக CIMA/ACCA/ ICASL) 10 முதல் 15 வருடங்கள் வரையிலான நிதித்துறை அல்லது வர்த்தகத்தொழிற்பாடு அல்லது அபிவிருத்தி திட்டங்கள் ஆகியவற்றில் உயர்மட்ட பதவிக்குரிய தொழில் அனுபவம்

**தொழில்சார் திறமைகள்**

- சர்வதேச கணக்கீட்டு நியமங்களிலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறையிலும் கொள்வனவு நடைமுறையிலும் சிறந்த நடைமுறைக்கால அனுபவம்
- இலங்கையில் நடைமுறையிலுள்ள கணக்கீட்டு கொள்கைகளிலும் நடைமுறைகளிலும் அரசதுறைக் கணக்கீட்டிலும் செலவினக்கட்டுப்பாட்டு நடைமுறையிலும் சிறந்த அறிவு
- திட்ட மட்டத்தில் அல்லது நிறுவன மட்டத்தில் கணக்கீட்டு நடைமுறை உருவாக்கம் ஆவணப்படுத்தல் நடைமுறைப்படுத்தல் தொடர்பான அனுபவம்
- கணனி அறிவு பெற்றிருத்தல்.

**சம்பளம்**

2000.12.26 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம் இல. 10 இன் 05 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் விண்ணப்பதாரியின் தகைமைகள் மற்றும் அனுபவத்தினடிப்படையில் பேசித் தீர்மானிக்கப்படலாம்.

**தொழில்நுட்ப பணிப்பாளர் பதவி (01 வெற்றிடம் திட்ட முகாமைத்துவ காரியாலயம் )**

**கடமைகளும் பொறுப்புகளும்**

கருத்திட்ட அமுலாக்கும் திட்டத்திலும் கடன் ஒப்பந்தத்திலும் விபரிக்கப்பட்ட திட்டத்தினை தயாரிப்பதிலும் கையாளுவதிலும் செயற்படுத்துவதிலும் தேவையான விசேட தொழில்நுட்பங்களை வழங்கவேண்டும்.

( 9ஆம் பக்கம் பார்க்க)

**தேவையான தகைமையும் அனுபவமும்**

குறைந்தது 15 வருட அனுபவத்தினைக்கொண்ட பட்டய எந்திரி

**தொழில்சார் திறமைகள்.**

- திட்டப் பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்குவதோடு திட்டத்திற்கு தேவையான தொழில்நுட்ப சேவையை வழங்கும் ஆற்றல்
- திட்ட முகாமைத்துவப் பிரிவில் கிடைக்கும் பல வித திட்டங்களை தொழில்நுட்ப ரீதியாக கணிப்பிடும் ஆற்றல்
- சேவைகளையும் வழங்கல்களையும் பொருட்களையும் பெற்றுகொள்வதற்கான அடிப்படையான அறிவைக்கொண்டிருப்பதோடு திட்டத்தினை சிறப்பான துறையில் செயலாற்ற கண்காணிக்கும் ஆற்றல்
- தனக்குரிய வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதில் ஏற்படும் பிரச்சினைகளை பகுப்பாய்வு செய்வதற்கான ஆற்றல்
- கணனி அறிவு பெற்றிருத்தல்.
- எழுத்து மூலமாகவும் வாய் மூலமாகவும் திறமையாக தொடர்பு கொள்ளும் ஆற்றல்
- ஆங்கிலத்தில் எழுதவும் கதைப்பதற்குமான உயர் மட்டத் தேர்ச்சி.
- கேள்விகளை கணிப்பீடு செய்வதிலும் கொள்வனவு நடைமுறைகளிலும் அறிவினைக்கொண்டிருத்தல்.

சம்பளம்

2000.12.26 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம் இல. 10 இன் 05 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் விண்ணப்பதாரியின் தகைமைகள் மற்றும் அனுபவத்தினடிப்படையில் பேசித் தீர்மானிக்கப்படலாம்.

<u>சுகாதார நிபுணர் பதவி (01 வெற்றிடம் திட்ட முகாமைத்துவ காரியாலயம் )</u>

**கடமைகளும் பொறுப்புகளும்**

சுகாதார நிபுணர் திட்ட முகாமைத்துவப் பிரிவின் ஓர் பகுதியாகும். ஆனால் மாகாண சுகாதார திணைக்களத்திலிருந்து கடமை புரிவார். சுகாதார நிபுணர் சுகாதார நிர்வாகத்திலும், நோய் பரவாது தடுத்தலிலும், குணப்படுத்தலிலும் அனுபவம் வாய்ந்த வைத்தியதுறையில் தேர்ச்சியுடையவராயிருப்பார். அத்தோடு சுகாதார நிர்வாகத்திலும் மாவட்டங்களில் திட்டமிடல் முகாமைத்துவ ஆளணியின் மதிப்பைப் பெற்றவராயிருத்தல் வேண்டும். பின்வரும் பணிகளை அவர் / அவள் மேற்கொள்வார்.

- சுகாதார வசதிகளுக்கு ஆதாரமான திட்டங்களை திட்டமிடுவதிலும் செயற்படுத்துதலிலும் திட்டப்பணிப்பாளருக்கு ஆதரவாயிருத்தல்
- பொதுசுகாதார தாதிமார்களையும் சுகாதார தொண்டர் வேலையாட்களையும் நியமனம் செய்வதிலும் பயிற்றுவிப்பதிலும் நிறுவனத்திற்கு உதவியாயிருத்தல்
- சுகாதார தொண்டர் வேலையாட்களுக்கான பாடத்திட்டத்தை தயாரிப்பதில் உதவியாயிருத்தல்
- வைத்திய சுகாதார விடயங்களில் திட்டப்பணிப்பாளருக்கு தொழில்நுட்ப வழிகாட்டல்
- தண்ணீர், சுகாதாரதிட்டங்கள் செயற்படுத்தப்படும் பாடசாலைகளிலும் கிராமங்களிலும் பிரதேசசுகாதார சேவைகள் அத்தியட்சகரும் , மற்றும் சுகாதார உத்தியோகத்தர்களும், சுகாதார கல்வி திட்டங்களை நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்து கொள்ளுதல்
- சுகாதார விடயங்கள் சம்பந்தமான திட்டவேலைகளுக்கும், மதிப்பீடுகளுக்கும், ஆய்வுரைகளுக்கும் சுகாதார திணைக்களத்தின் ஆதரவினை பெற்றுக்கொள்ளுவதை ஒழுங்குபடுத்துவதும் , உறுதிப்படுத்துவதும்
- கால அட்டவணைக்கேற்பவும் நல்ல தரத்தினை பேணுவதற்காகவும் சுகாதார திட்ட நடவடிக்கைகள் ( பொது சுகாதார சேவைகள் மீளத்தாபித்தலும் வைத்திய வ்சதி மேம்பாடுகள் பொதுசுகாதார தாதிகள் பயிற்சி) செயற்படுத்துவதை உறுதிசெய்தல்
- திட்டப்பணிப்பாளர் தமது திட்ட முன்னேற்ற அறிக்கையில் சேர்த்துக்கொள்வதற்காக சுகாதார உபதிட்டங்களின் நிலைமைகளையும் தகவல்களையும் பேணிப்பாதுகாத்தல்

**தேவையான தகைமையும் அனுபவமும்**

சுகாதார நிர்வாகத்திலும், நோய்வராது தடுப்பதிலும் , குணப்படுத்துதலிலும் உள்ள அனுபவத்துடனான வைத்திய கலாநிதிப்பட்டம். கணனி அறிவு பெற்றிருத்தல்

சம்பளம்

2000.12.26ந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம் இல. 10 இன் 05 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் விண்ணப்பதாரியின் தகைமைகள் மற்றும் அனுபவத்தினடிப்படையில் பேசித் தீர்மானிக்கப்படலாம்.

<u>உள்ளகக்கணக்காய்வாளர் (01 பதவிவெற்றிடம் திட்ட முகாமைத்துவ காரியாலயம்)</u>

**கடமைகளும் பொறுப்புகளும்**

நிதிமுகாமைத்துவம் செவ்வனே இருப்பதற்காக நிதிமுகாமைத்துவத்தின் உள்ளகக்கட்டுப்பாட்டிற்கு பொறுப்பாகவிருத்தல்.

**தேவையான தகைமைகளும் அனுபவங்களும்**

பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் அல்லது ஐக்கிய இராச்சிய பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் (CIMA) அல்லது ஐக்கிய இராச்சியத்தினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் (CACA) ஆரம்ப நிலையில் பகுதி 1, பகுதி 2 இல் சித்தியும், தொழில்சார் நிலையில் பகுதி 1 இல் சித்தியும் இருத்தல் வேண்டும். அத்துடன் கணக்காய்வு துறையில் 3 வருட நிறைவேற்று தகைமையை கொண்டிருத்தல் வேண்டும்.

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்லூரியின் உயர் தேசிய கணக்கியல் / வர்த்தக டிப்ளோமாவில் சித்தி அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் கணக்கியல் அல்லது பொருளியல் பாடத்தில் பட்டதாரி, அத்துடன் கணக்காய்வு துறையில் 5 வருட நிறைவேற்று தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

சம்பளம்

அரச சேவையில் இப்பதவிக்குரித்தான சம்பளத்துடன் விண்ணப்பதாரியின் தகைமைகளுக்கும் அனுபவத்திற்குமமைவாக 2000.12.26 ஆம் திகதிய இல 10 முகாமைத்துவ சுற்றுநிருபத்தின் பிரமாணம் 5ற்கு அமைவாக அப்பதவிக்கான சம்பளத்தின் 50% மேற்படாத படி ஒன்று வழங்கப்படும்.

<u>திட்டச் செயலாளர் (01 பதவிவெற்றிடம் திட்ட முகாமைத்துவ காரியாலயம்)</u>

**கடமைகளும் பொறுப்புகளும்**

திட்ட முகாமைத்துவப் பிரிவு திறமையாக இயங்குவதற்கு திட்டச்செயலாளர் தமது ஒத்துழைப்பை வழங்குவதுடன் திட்ட, தொழில்நுட்ப அலுவலகர்களுக்கு செயலாளர் சேவையை வழங்கவேண்டும்.

**தேவையான தகைமைகளும் அனுபவங்களும்**

க. பொ. த (உயர்தரம்) பரீட்சையில் எல்லா பாடங்களிலும் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் செயலாளருக்குரிய பயிற்சி நெறி அல்லது பட்டயச்செயலாளராவதற்குரிய பயிற்சி நெறி ஏதேனும் செய்திருப்பதுடன் 5 வருட அனுபவம்

அல்லது

பட்டயச்செயலாளர்

**தொழில்சார் திறமைகள்**

- ஆங்கிலத்திலும் கணனியிலும் சிறப்பு ஆற்றல்
- சிறந்த தொடர்பாடல் (எழுதவும் கதைப்பதற்கும்), தாமாக எழுத்து மூலமாகவும் வாய் மூலமாகவும் திறமையாக தொடர்பு கொள்ளும் ஆற்றல்
- அலுவலக ஒழுங்கு முறையினை தாபிப்பதிலும், நடைமுறைப்படுத்துதலிலும் ஆற்றல். அதாவது கோப்பிடுதல், கொள்வனவு , அலுவலக நடைமுறைகள்
- அலுவலக உபகரணங்ளை பராமரித்தல். அத்துடன் ஒப்பந்தங்களையும் , கணனி தரவுகளையும் பராமரித்தல்
- குழு சுற்றாடலில் செயற்பாடுகளை திறமையாக மேற்கொண்டு மற்றவர்களுடன் நல்லதொரு மக்கள் உறவை மேம்படுத்தல்
- குறுகிய கால வேளைக்குள்ளும் இக்கட்டான சூழ்நிலையில் வேலை செய்வதற்குமான திறமை

சம்பளம்

2000.12.26ந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபம் இல. 10 இன் 05 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் விண்ணப்பதாரியின் தகைமைகள் மற்றும் அனுபவத்தினடிப்படையில் பேசித் தீர்மானிக்கப்படலாம்.

**சி. ரங்கராஜா,**
பிரதம செயலாளர்,
தலைவர்,
வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நீகோட்)
திருகோணமலை.

(சி-13602)

## இங்கிலாந்தின் இதுவரையான மோசமான தோல்விகள்



பாகிஸ்தானுடனான மூன்றாவது ஒருநாள் போட்டியில் 165 ஓட்டங் கள் வித்தியாசத்தில் தோற்ற இங்கிலாந்து அணி 1986 ஆம் ஆண்டு முதல் இறுதிவரை எட்டுப் போட்டிகளில் அவ்வாறான தோல்வியைச் சந்தித்துள்ளது.

அதன் விபரம் வருமாறு; 1986 ஆம் ஆண்டு மேற்கிந்தியத்தீவுகளுடனான போட்டியில் 135ஓட்டங்கள், 1994 ஆம் ஆண்டு மேற்கிந்தியதீவுகள் அணியுடனான போட்டியில் 165 ஓட்டங்கள், 1999ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுடனான போட்டியில் 162 ஓட்டங்கள்,2001ஆம் ஆண்டு நியூசிலாந்துடனான போட்டியில் 155 ஓட்டங்கள், 2000 ஆம் ஆண்டு சிறிலங்காவுடனான போட்டியில் பத்து விக்கெட் தோல்வி,2002 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுடனான போட்டியில் பத்து விக்கெட்டு தோல்வி, 2005 ஆம் ஆண்டு பாகிஸ்தானுடனான போட்டியில் 165 ஓட்டங்களால் தோல்வி எனப் பட்டியல் உள்ளது.

## பேர்த் டெஸ்ட் கிறிக்கெட்போட்டி ஓட்டம் குவிக்கிறது அவுஸ்திரேலியா



அவுஸ்திரேலியா-தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் பேர்த்தில் நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்ட்போட்டியின் இரண்டாவது இனிங்சில் அவுஸ்திரேலியா பலமான நிலையில் உள்ளது.

38ஓட்டங்களுக்கு ஒருவிக்கெட் என்ற நிலையில் நேற்று தொடர்ந்து ஆடிய அவுஸ்திரேலியா நான்கு விக்கெட்டுக்களை இழந்து 310 ஓட்டங்களை பெற்றுள்ளது. துடுப்பாட்டத்தில் கொக் ஆட்டமிழக்காது 91 ஓட்டங்களையும், குசே ஆட்டமிழக்காது 54 ஓட்டங்களையும் பெற்று களத்தில் உள்ளனர்.

இவர்களை விட பொண்டிங் 53, லாங்கர் 47ஓட்டங்களைப்பெற்றனர். பந்துவீச்சில் லாங்வெல்ட் இரண்டு, போலக் நிற்றினி, தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

அவுஸ்திரேலியா முதல் இனிங்ஸ் 258 ஓட்டம் தென்னாபிரிக்கா, முதல் இனிங்ஸ் 296 ஓட்டம். போட்டியின் நான்காம் நாள் இன்று.



## ஷேன் வோர்ன் புதிய சாதனை



தென்னாபிரிக்காவுக்கு எதிராக பேர்த்தில் நடைபெற்றுவரும் முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் 2-ஆம் நாள் ஆட்டத்தில் புதிய சாதனை படைத்தார் அவுஸ்திரேலியாவின் ஷேன் வோர்ன். ஓர் ஆண்டில் அதிகமான விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர்கள் வரிசையில் முதலிடத்தைப் பிடித்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதன் மூலம் 2005-ஆம் ஆண்டில் மொத்தம் 87 விக்கெட்டுகளைச் சேர்த்து, சக நாட்டு வீரர் டென்னிஸ் லில்லியின் சாதனையைப் பின்னுக்குத் தள்ளியுள்ளார் வோர்ன். 1981-ஆம் ஆண்டில் 85 விக்கெட்டுக்களை லில்லி கைப்பற்றியதே சாதனையாக இருந்தது. தலா 80 விக்கெட்டுக்களுடன் தென்னாபிரிக்காவின் அலன் டொனால்ட் (1998-ஆம் ஆண்டு) இலங்கையின் முத்தையா முரளிதரன் (2001-ம் ஆண்டு) 2-ஆம் இடத்திலும், மே.இ. தீவுகளில் ஜோயல் கார்னர் (1984 -ஆம் ஆண்டு) மூன்றாம் இடத்திலும் இருக்கின்றனர்.

## முரளிதரன், மாலிங்க சிறப்பான பந்து வீச்சு அகமதாபாத்தில் சிரமப்படுகிறது இந்தியா



இந்திய - சிறிலங்கா அணிகளுக்கிடையில் அகமதாபாத்தில் நேற்று ஆரம்பமான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட்போட்டியில் முதலில் ஆடும் இந்திய அணி நேற்று ஆட்டநேர நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 247 ஓட்டங்களை பெற்றிருந்தது.

ஒருகட்டத்தில் 97 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட்டுக்களை இழந்து இந்திய அணி தடுமாறியபோது லக்ஸ்மனின் நின்று நிலைத்த ஆட்டமும் டோனியின் அதிரடி ஆட்டமும் இந்திய அணி மேலும் ஓட்டம் குவிக்க உதவியது. டோனி 49 ஓட்டங்களைப்பெற்று ஆட்டமிழந்தார். ஆட்டமிழக்காது லக்ஸ்மன் 71ஓட்டங்களையும், பதான் 39 ஓட்டங்களையும், பெற்று களத்தில் உள்ளனர்.

பந்து வீச்சில் முரளிதரன் மூன்று விக்கெட்டுக்களையும், மாலிங்க இரண்டு விக்கெட்டுக்களையும், பண்டார ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.





ரஷ்யாவின் செயின்ட் பீற்றர் ஸ்பெர்க் நகரில் பெண்களுக்கான உலக கைபந்து சம்பியன்ஷிப் போட்டி நடந்தது. இதில் ஹாலந்து அணியில் பெர்ல் வசம் இருந்து பந்தைத் தட்டிச் செல்லத்தான் இப்படி போராடுகிறார் தென் கொரியாவின் சாங்ஹாய் -ரிம் (வலது).

## உலகக்கிண்ணத்தை வெல்லும் திறனில் இங்கிலாந்து உள்ளது



வோன்

பாகிஸ்தானுடனான போட்டிகளில் தற்போது தனது அணி மோசமாக தோல்வியை சந்தித்துவந்தாலும் மேற்கிந்தியதீவுகளில் இன்னும் 15 மாதங்களில் நடைபெறவுள்ள உலகக்கிண்ணப்போட்டியில் வெல்லும் திறனைக் கொண்டிருப்பதாக இங்கிலாந்து கிரிக்கெட் அணித்தலைவர் மைக்கல் வோன் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுடனான சுற்றுத்தொடர் கடினமாக இருப்பதைப்போல் மேற்கிந்தியத்தீவு மண்ணிலும் இருக்குமா என்பது சந்தேகமே எனத் தெரிவிக்கும் அவர், உலகக் கிண்ணத்தை வெல்ல வேண்டுமாயின் அணி முன்னேற்றம் காணவேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

பி.பி.சி. வானொலிக்கு அவர் கருத்து தெரிவிக்கும் போது; அணிக்கு வெளியிலும் உள்ளேயும் சிறந்த வீரர்கள் இருப்பதால் திறமையைக் காட்ட வாய்ப்பு இருப்பதாகத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது; வெளிநாட்டில் ஒருநாள் தொடர் ஒன்றை வெல்ல முடியா விட்டாலும் கடந்த மினி உலகக்கிண்ணப்போட்டியில் இறுதிப்போட்டி வரை சென்றதை அவர் சுட்டிக்காட்டினார். எனினும் தவறுகள் உள்ள இடத்தை திருத்திக் கொள்ள வேண்டும் என்பதையும் அவர் மறுக்கவில்லை.

கடந்த இருவருடங்களாக வோனின் தலைமையில் சற்றுத் திறனம் காட்டிவரும் இங்கிலாந்து அணி சார்ஜாவில் 1997ஆம் ஆண்டு நடந்த போட்டிக்குப்பின்னர் இந்தியா பாகிஸ்தான், மேற்கிந்திய தீவுகள் போன்ற பலமான அணியுடனான போட்டியில் வெற்றிபெறவில்லை.




## யூனியர் உலகக் கிண்ண கிரிக்கெட் அவுஸ்திரேலிய அணி அறிவிப்பு

யூனியர் உலக கோப்பை கிரிக்கெட் போட்டிக்கான அவுஸ்ரேலியஅணி அறிவிக்கப்பட்டுள்ளது.

19வயதுக்கு உட்பட்டோருக்கான ஐ.சி.சி யூனியர் உலக கோப்பை கிரிக்கெட் போட்டி இலங்கையில் பெப்ரவரி மாதம் ஐந்தாம் திகதி முதல் 19 திகதிவரை நடக்கிறது. இந்நிலையில் இதில் கலந்து கொள்ளும் 16 பேர் கொண்ட அவுஸ்திரேலிய அணியை அந்நாட்டு கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

உலக கோப்பைக்கான அவுஸ்திரேலிய அணி வீரர்கள் விபரம் வருமாறு:-

மோசஸ் ஹென்ரிக்ஸ் தலைவர், ஆரோன் பின்ச் (துணைத் தலைவர்),ஜாக்சன் பேர்ட், டாம் கூப்பர், பென்கட்டிங்,ஜோன் ஹாலந்து, சிமோன்கீன், உஸ்மான் கவஜா, ஜாக் மெக்நமரா, அடம்ரிச்சார்ட், வில்லியம் சேரிடன், டாம்ஸ்டிராய்,மாத்யூவடே, டேவிட் வார்னர், பென்டங்க், பிலிப்வெல்ஸ்.

## மாவீரர் வெற்றிக் கிண்ண கால்பந்து; கரைச்சிப் பிரதேச தெரிவுப் போட்டி

மாவீர் வெற்றிக் கிண்ணத்துக்கான கரைச்சிப் பிரதேச கழகங்களுக்கிடையிலான கால்பந்து தெரிவுப் போட்டி நேற்று ஆரம்பமானது.

கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டுக் கழகத்தில் காலை முதல் மாலை வரை நடைபெற்ற இப்போட்டியில் திருநகர், உழுவர் ஒன்றியம், கோணாவில் மின்னல், உருத்திரபுரம் விளையாட்டுக் கழகங்கள் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்குத் தெரிவாகின.

ஸ்கந்தா, பிறைக்சன், இளந்தளிர், உதயதாரகை அணிகள் தோல்வி அடைந்து வெளியேறின.

மேற்படி போட்டிகளுக்கு புவனேந்திரராஜா, சிவனேசன், ஜெயக்குமார், விக்கினேஸ்வரன் ஆகியோர் மத்தியஸ்தர்களாக கடமையாற்றினர்.

இன்று காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகும் போட்டியில் திருநகர் அணியை எதிர்த்து சந்திரோதயா அணியும், 9.00 மணிக்கு லக்கிஸ்ரார் அணியை எதிர்த்து மின்னல் அணியும் மோதவுள்ளன.

மாலை அரையிறுதி ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

## சிந்தனைக்கு



ஒரு உயிர் உன்னதமானது என்பதை நானறிவேன்; ஆனால் உயிரிலும் உன்னதமானது எமது உரிமை,எமது சுதந்திரம், எமது கௌரவம்.

தமிழீழ தேசியத் தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 19.12.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## அரசின் சதி நடவடிக்கை

ஆசிய நாட்டில் பேச்சுவார்த்தை என்ற சிறிலங்கா அரசின் தீர்மானத்தை விடுதலைப்புலிகள் நிராகரித்துவிட்டனர். இது எதிர்பார்க்கப்பட்டதொன்றே. ஏனெனில் ஏற்கனவே இது தொடர்பாக விடுதலைப்புலிகள் தமது நிலைப்பாட்டைச் சர்வதேச சமூகத்திற்குத் தெரிவித்திருந்தனர். இதன் பிரகாரம் தடைப்பட்டுப் போயுள்ள பேச்சுவார்த்தைகள் சமாதான ஏற்பாட்டாளர்களாகச் செயற்படும் நோர்வேயிலோ அன்றி வேறு ஐரோப்பிய நாடு ஒன்றிலோ நடத்தப்பட வேண்டும் என்பதே அதுவாகும்.

இதனை அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் மீண்டும் நேற்று முன்தினம் நடந்த செய்தியாளர் மாநாட்டில் உறுதி செய்துள்ளார். ஆனால் ஒன்று புலிகள் ஆசியாவில் பேச்சுவார்த்தைகளை நடத்துவதை முற்றாக நிராகரிக்கவில்லை என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. ஆசியாவில் ஆரம்பப் பேச்சுக்கள் நடத்தப்படுவதற்கில்லை என்பதே ஆகும்.

இதேவேளை சிறிலங்கா அரசாங்கம் ஆசியாவில் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் எனத் தீர்மானம் மேற்கொண்டிருப்பது ஏன்? ஆசியாவிற்கு வெளியில் சென்றால் பெரும் பொருட்செலவீடு ஏற்பட்டு விடும் என்பதினாலா? அன்றி ஐரோப்பிய நாடுகளோ அன்றி வேறு நாடுகளோ பேச்சுவார்த்தைக்கு ஒத்துழைக்கப் போவதில்லை என்ற முடிவினாலா?

ஆனால் அவ்வாறு எதுவும் இருப்பதாக இல்லை. ஆசிய நாட்டில் பேச்சுவார்த்தை நடாத்துவதென்பது சிறிலங்கா அரசின் ஒரு வகையான சதி நடவடிக்கையே ஆகும். ஆனால் இதற்கு சிறிலங்கா கற்பித்துக்கொள்ளும் விளக்கம் அணிசேரா நாடுகள் அமைப்பில் சிறிலங்கா அங்கம் வகிப்பதனால் அவ்வமைப்பில் அங்கம் வகிக்கும் நாட்டில் பேச்சுக்களை நடத்தலாம் என்பது.

இக் காரணி வலுவற்றதாகும். அணிசேராநாடுகள் என்ற தத்துவமே இன்று அர்த்தமற்றதாகிவிட்டதொன்று. முடிவுற்ற கெடுபிடிப்போர்க் காலத்தில் பேசப்பட்ட கோட்பாடு, கெடுபிடிப் போர் முடிவுற்றுள்ள இன்றைய நிலையில் வலுவிழந்ததாகிவிட்டது. சுருக்கமாகக் கூறுவதானால் சிறிலங்கா ஆட்சியாளர்கள் தற்பொழுது தமது தேவைக்காகத் துக்கிப்பிடிக்கும் ஒன்றாகவே அணிசேரா நாடுகள் என்ற கோட்பாடும் அமைப்பும் உள்ளது.

மறுவளமாக, நிதியுதவிகளுக்காகவும், இராணுவஉதவிகளுக்காகவும், விடுதலைப்புலிகள் மீது அழுத்தம் பிரயோகிக்க வேண்டும் என்ற நிலையிலும் ஐரோப்பிய அமெரிக்க நாடுகளை நாடும் சிறிலங்கா ஆட்சியாளர்கள் இனப்பிரச்சினைக்காக என்ற ரீதியில் பேச்சுவார்த்தை என்னும்போது ஐரோ.,அமெ, நாடுகள் தேவையில்லை எனக் கும்பிடு போடுவது ஏன்?

இதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன. உதாரணமாக இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வென்பது சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி ஆட்சிமுறை என ஐரோப்பிய நாடுகள் இலகுவாகவே கூறிவிடக்கூடியன. கடந்த காலத்தில் இதனை அவர்கள் தெளிவுபடுத்தியும் உள்ளார். ஏனெனில் இது ஓர் சிறந்த வழிமுறை என அவர்கள் நடைமுறையில் கண்டுள்ளனர்.


இதற்கு அடுத்ததாக ஐரோப்பிய நாடுகளால் இனப்பிரச்சினை ஓரளவு புரியப்பட்ட ஒன்றாகியுமுள்ளது. இதற்கு இந்நாடுகள் இவ் விடயத்தில் அக்கறை காட்டுவதும் ஒரு காரணமாகும். ஆகையினால் இனப்பிரச்சினைக்குரிய தீர்வை அவர்கள் விளங்கிக் கொண்டுள்ளனர்.

இதனைத்தவிர நோர்வே அரசு சமாதான ஏற்பாட்டாளராகவும், கண்காணிப்புக்குழுவின் தலைமைத்துவ நாடாகவும் இருக்கும் அதே வேளை ஸ்கண்டிநேவிய நாடுகளின் பிரதிநிதிகள் யுத்த நிறுத்த கண்காணிப்பாளராகவும் உள்ளனர். இந் நிலையில் அந் நாடுகளில் பேச்சுக்களை நடத்துவதானது பிரச்சினைகளை இலகுவில் விளங்கிக்கொண்டு பேச்சுக்கள் நடத்த ஏதுவானதாக இருக்கும்.

இதற்கும் அப்பால் சுமார் ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழ் மக்கள் இந் நாடுகளில் வாழுகின்றமை காரணமாக ஐரோப்பிய நாடுகளில்இனப்பிரச்சினையின் தாக்கம் புரியப்பட்டதொன்றாகியுள்ளது. ஆகையினால் இனப்பிரச்சினை தீர்வை ஐரோப்பாவில் முன்னெடுத்தல் சாத்தியப்பாடானதாக இருக்கும்.

இத்தகைய சாதகமான சூழ்நிலை இருக்கையில் ஆசிய நாடொன்றில் பேச்சுவார்த்தை நடத்துவதென்ற முடிவிற்கு அரசாங்கம் வரக் காரணம் இல்லாமல் இல்லை. அதாவது இனப்பிரச்சினைக்கு ஓர் ஏற்புடைய தீர்வொன்றை முன்வைக்க முடியாமலும் உறுதியான முறையில் பேசித் தீர்மானிக்க விருப்பம் இல்லாமலும் இருப்பதுமே காரணமாகும்.

. சுருக்கமாகக் கூறுவதானால் சமஷ்டி அமைப்புக்கள் பலவீனமான நிலையிலுள்ளதும், ஒற்றையாட்சியும், மன்னராட்சியும் நடைபெறும் நாடுகளிலும் பொதுவில் தேசிய இனங்களின் பிரச்சினைக்கு ஒடுக்குமுறைகள் மூலம் தீர்வு காண விளையும் ஆசிய நாடுகள் ஒன்றில் பேச்சுவார்த்தைகளை நடத்தவே சிறிலங்கா அரசாங்கம் விரும்புகின்றது என்பதே உண்மையாகும். இதனை அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்செல்வன் அவர்கள் சதி நடவடிக்கை எனக் கூறியதில் தவறில்லை.



அரசின் தந்திர நகர்வுகள்

## அமைதி முயற்சிகளிலிருந்து எரிக்கை நீக்க சிறிலங்கா அரசாங்கம் தீவிரம்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்கான அமைதி முயற்சிகளிலிருந்து நோர்வே சிறப்புத்தூதரும் அமைச்சருமான எரிக்சூல் ஹெய்மை நீக்குவதில் சிறிலங்கா அரசாங்கம் முனைப்புக் காட்டி வருகிறது.

சிறிலங்கா அரசுக்கு நோர்வே அனுசரணையாளர்கள் நிபந்தனை விதித்துவரும் நிலையில் சிறிலங்கா அரசுத் தரப்பில் எரிக் சூல் ஹெய்மை நீக்குகிற நிபந்தனையும் முன் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நோர்வே வெளிவிவகார அமைச்சு தான் அனுசரணையாளராக செயற்பட வேண்டும் என்றும் எரிக்சூல்ஹெய்ம் என்ற தனிமனிதரை முன்னிறுத்துதல் தவிர்க்கப்பட வேண்டும் என்றும் சிறிலங்காத் தரப்பு கூறிவருகிறது.

கடந்த வியாழக்கிழமை நோர்வே மற்றும் சிறிலங்கா அரசுகளுக்கு இடையேயான பேச்சுக்களில் இது வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சூழலில்தான் எதிர்வரும் வாரம் கொழும்புக்கு வருகை தர இருந்த பயணத்தையும் எரிக் சூல் ஹெய்ம் மேலும் தாமதப்படுத்துவதாகவும் கூறப்படுகிறது.

ஆனால், இன்று திங்கட்கிழமை பிரசெல்சில் நடைபெறவுள்ள இணைத்தலைமை நாடுகளின் கூட்டத்தில் நோர்வே பிரதிநிதியாக எரிக்சூல்ஹெய்மே கலந்து கொள்ளவுள்ளார். இதன் மூலம் அமைதி முயற்சிகளில் எரிக்சூல் ஹெய்ம்தான் தொடர்ந்து முதன்மைப் பாத்திரம் வகிப்பார் என்பதை நோர்வே மறைமுகமாகத் தெரிவித்திருப்பதாக கருதப்படுகிறது.

ஹொங்கொங்கில் நோர்வே மற்றும் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர்கள் இடையேயான சந்திப்பிலும் இரு தரப்பு நிபந்தனைகள் தொடர்பில் விவாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

சிறிலங்கா சனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கும் பிரதான கட்சிகளான ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமயவினது நிலைப்பாட்டையும் ஆதரவையும் அறிந்து கொள்ள நோர்வே விரும்புகிறது.

ஆனால், அந்த இரு கட்சிகளும் நோர்வேயை முழுமையாக ஆதரிப்பதாக அறிவிப்பதில் அந்தக் கட்சிகளுக்கு உடன்பாடு இல்லை என்பதால் சிறிலங்கா அரசாங்கம் இதுவிடயத்தில் எதுவித வெளிப்படையான உறுதிமொழியையும் நோர்வேத் தரப்புக்கு அளிக்கவில்லை.

மேலும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் நோர்வே உள்ளிட்ட நாடுகளுடன் ஆசிய நாடுகளையும் இணைத்துக் கொள்ள வெண்டும் என்ற சிறிலங்கா அரசாங்கம் மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் நிலைப்பாட்டில் நோர்வே அதிருப்தியடைந்திருப்பதாகவும் தெரிகிறது.

இந்த விடயங்களில் மகிந்த ராஜபக்ஷவினது நிலைப்பாட்டை முழுமையாக அறிந்து கொண்ட பின்புதான் அமைதிப் பேச்சுக்களின் வடிவம், இடம் குறித்த அடுத்த பிரச்சினைகளுக்குள் செல்லலாம் என்று நோர்வே கருதுகிறது. அதேநேரத்தில் இப்படியான சிக்கலை நோர்வேக்கு உருவாக்குவதன் மூலம் பேச்சுக்களைத் தாமதப்படுத்தவும் யப்பான் போன்ற ஒரு நாட்டை அனுசரணையாளராக அமர்த்தவும் சிறிலங்கா அரசாங்கம் மறுபுறம் முயற்சித்து வருவதாகவும் கூறப்படுகிறது.

யப்பானிய சிறப்புத்தூதுவர் அகாசியின் அண்மைய கொழும்புப் பயணமும் அவரது கருத்துக்களும் முன் எப்போதையும் விட சர்ச்சைக்குரியதாகவும் அனுசரணையாளர் என்ற இடத்துக்காக போராடுவதாகவும் வெளிப்பட்டுள்ளது.

இவற்றையும் நோர்வே கணக்கில் எடுத்துக் கொண்டு சிறிலங்கா அரசாங்கம் தொடர்பிலான தனது நிலைப்பாட்டை விரைவில் பகிரங்கப்படுத்தப்படக்கூடும் எனக் கொழும்பு வட்டாரங்களில் எதிர்பார்க்கின்றன.

## முப்படையினர் தயார் நிலையில் இருக்க வேண்டும்

## கடற்படைத் தளபதி கரன்னாகொட உத்தரவு

(கொழும்பு)

தற்போது இருப்பது நிரந்தர சமாதானமல்ல யுத்த நிறுத்தம் மட்டுமே என்பதால் எந்தவொரு சவாலுக்கும் அச்சுறுத்தலுக்கும் முகம்கொடுக்கக் கூடிய வகையில் முப்படையினர் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று சிறிலங்கா கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் வசந்த கரன்னாகொட உத்தரவிட்டுள்ளார்.

தியத்தலாவ விமானப்படை முகாமில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றுப் பேசுகையிலேயே அவர் இதைத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்காக தயாராகும் இந்த நேரத்தில் அதற்குத் தேவையான பின்னணியை ஏற்படுத்திக்கொடுக்கும் கடமை பாதுகாப்புப் படையினருக்கு இருப்பதாகவும் எதிராளியின் எந்தவொரு அச்சுறுத்தலுக்கும் முகம்கொடுக்கத் தயார் நிலையில் இருந்து கொண்டே அதனைச் செய்ய முடியும் என்றும் அவர் கூறியுள்ளார் அதனால் எதிராளிக்கு பயமின்றி முகம் கொடுத்து எந்தவொரு சவாலையும் வெற்றிகொள்ள தயாராக இருப்பது அவசியமானது என்றும் வசந்த கரன்னாகொட மேலும் தெரிவித்துள்ளார்.

## 55 ஆசனங்கள் ஒதுக்குமாறு ஜே.வி.பி. கோரிக்கை

(கொழும்பு)

சிறிலங்கா பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் 55 ஆசனங்களை ஒதுக்குமாறு ஜே.வி.பி. வலியுறுத்தியுள்ளது.

ஐ.ம.சு. வினருக்கும் ஜே.வி.பி. இற்கும் இடையேயான பேச்சுக்களில் இது வலியுறுத்தப்பட்டுள்ளது.

2004ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் ஒதுக்கப்பட்ட 40 ஆசனங்களில் 39 ஆசனங்களில் தமது கட்சி வெற்றிபெற்றுள்ள நிலையில் எதிர்வரும் தேர்தலில் 55 ஆசனங்கள் ஒதுக்கப்பட்டால் 50 உறுப்பினர்கள் உறுதியாக பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படுவர் என்றும் ஜே.வி.பி. விளக்கியுள்ளது.

இதனிடையே பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக நடைபெறக்கூடிய உள்ளூராட்சித் தேர்தலில் 50:50 என்ற கணக்கில் அதாவது அரைவாசி ஆசனங்களை தங்களுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும் ஜே.வி.பி. கோரியுள்ளது.

2006ஆம் ஆண்டு மத்தியில் பாராளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டும் என்று மகிந்த ராஜபக்ஷவுக்கு ஜே.வி.பி. நெருக்குதல் கொடுத்து வருகிறது. ஆனால், மகிந்த ராஜபக்ஷவோ அதற்கு முன்னதாகவே மார்ச் மாதம் தேர்தலை நடத்தத் திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. மார்ச் மாதம் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டால் உள்ளூராட்சித் தேர்தல்கள் மேலும் ஓராண்டு காலத்திற்கு ஒத்திப்போடக் கூடும் என்றும் கூறப்படுகிறது.







சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகம் சேதமாக்கப்பட்டிருப்பதையும், அப்பகுதியில் குவிக்கப்பட்டிருந்த படையினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-ஆன்சிலீன்)

# சிறையில் பூத்த உணர்வின் ஒளி

# கவிதைத்தொகுப்பு வெளியீட்டு விழா



படம்-சோதி

(அலுவலக செய்தியாளர்)

"சிறையில் பூத்த உணர்வின் ஒளி" கவிதைத்தொகுப்பு வெளியீடு நேற்று பிற்பகல் 3.30 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

எழுகலை இலக்கியப்பேரவையின் தலைவர் பு.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் தமிழீழ தேசியக்கொடியினை தமிழீழ காவல்துறை துணைப்பொறுப்பாளர் மாதவன் ஏற்றிவைக்க, மங்கல விளக்கினை வடகிழக்கு மனித உரிமைகள் செயலக பணிப்பாளர் கருணாரட்ணம் அடிகளார் ஏற்றிவைத்தார். அடுத்து பொதுஈகச்சுடரினை மட்டு மாவட்ட தமிழ்தேசிய பாராளுமன்ற உறுப்பினர் தங்கேஸ்வரி ஏற்றிவைத்தார்.

தலைமையுரையினை தொடர்ந்து வரவேற்புரையினை வளவை வளவன் நிகழ்த்தினார். சிறப்புரையினை மட்டு.தமிழ்தேசிய பா.உ.தங்கேஸ்வரி, விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் ஆகியோரும், வெளியீட்டுரையினை ஆதிலட்சுமி சிவகுமாரும் நிகழ்த் தினர். சிறையில் பூத்த உணர்வின் ஒளி கவிதைத் தொகுதி நூலினை தளபதி ரமேஸ் வெளியிட்டுவைக்க, யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி பெற்றுக் கொண்டார். அடுத்து சிறப்புப் பிரதிகளை தமிழீழ நீதிநிர்வாகப் பொறுப்பாளர் பரா, தமிழீழ மகளிர் அரசியல்துறைப்பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் வழங்கிவைத்தனர். மதிப்பீட்டுரையினை விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் யோகரட்ணம் யோகி, மாலதி படையணியைச் சேர்ந்த மலைமகள் ஆகியோர் நிகழ்த்தினர். தமிழீழ சட்டக்கல்லூரியின் பொறுப்பாளரும் சட்டவாளருமான க.ஜெகதீஸ்வரன் பதிலுரையினையும் நன்றியுரையினையும் வழங்கினார்.

கலை ஆர்வலர்கள், பொறுப்பாளர்கள், போராளிகள், பொதுமக்கள் எனப் பெருமளவானோர் மேற்படி நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(சோ)

## புங்குடுதீவில் ..

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரம் மடத்தடியைச் சேர்ந்த தபால் ஊழியரான பாலசிங்கம் வரதராசா (வயது- 54 ) என்பவர் தலை,நெஞ்சு மற்றும் கழுத்தில் படுகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

தர்சினியின் இறுதிச் சடங்கு நடைபெற்ற பகுதிக்கு ஊர்திகளில் வந்த கடற்படையினர் மக்களை நோக்கி மிக வேகமாக ஊர்திகளைச் செலுத்தியதை அடுத்து கடற்படையினருக்கும் மக்களிற்குமிடையே முறுகல் நிலை ஏற்பட்டது. இதன் தொடர்சியாக ஆத்திரமுற்ற பொது மக்கள் அப்பகுதியில் பொதுமக்களின் தொடர்புக்காக கடற்படையினர் அமைத்திருந்த தொடர்பக அலுவலகத்தை சேதப்படுத்தியுள்ளனர்.

இதன்போது மக்களை நோக்கி கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டையடுத்து மக்கள் சிதறி ஓடியதில் பலர் சிறு காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

இதேவேளை நேற்று மாலை மூன்று மணியவில் புங்குடுதீவில் இருந்து யுவதியின் சடலம யாழ். போதனா வைத்தியசாலைக்கு ஊர்காவற்றுறை பதில் நீதவான் திருமதி. லிங்கா துரைராஜா தலைமையில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வழித்துணையுடன் எடுத்துச் செல்லப்பட்டது. (27.33.37)

## ஈழநாதம்..

என்பது குறிப் பிடத்தக்கது.

இதேவேளை புங்குடுதீவுப் பகுதியில் சிறிலங்கா கடற்படையினரின் அராஜகத்தைக் கண்டித்து நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் செய்தி சேகரிக்கச் சென்ற செய்தியாளர்களைக் கடற்படையினர் துப்பாக்கி முனையில் பயமுறுத்தினர் அத்தோடு. கொட்டன்களால் அடிக்கவும் முற்பட்டனர்.

நேற்றுப் பிற்பகல் புங்குடுதீவுப் பகுதிக்கு சென்ற பத்திரிக்கையாளர்களையே படையினர் துப்பாக்கி முனையில் பயமுறுத்தியுள்ளனர்.

(33,37,28)

## கொழும்பில்...

அட்டை மற்றும் சிறிலங்காவின் தேசிய அடையாள அட்டை என்பவற்றை பொலிசாரிடம் காட்டிய போதும் அதனை ஏற்காத பொலிசார் இவர்களைக் கைது செய்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் இவர்களை விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்த போதிலும் அதனை மறுத்த பொலிசார், தேடுதல் நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்ட பொது மக்களில் சிலரை விடுவித்த போதே இவர்களை விடுதலை செய்துள்ளனர்.

## மகிந்த...

மேற்கொண்டிருந்தது. புதிய தலைவராக சோமவன்ச அமரசிங்க பொறுப்பேற்ற பின்பு முழுமையான இந்திய ஆதரவுக் கட்சியாக ஜே.வி.பி. மாற்றம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## யுத்த...

யாழ்.குடாவில் இருந்து நாங்கள் வெளியேறியதன் பின்னர் இரண்டு பள்ளி முதல்வர்கள் கொலை செய்யப்பட்டனர்.அதன் பின்னர்அங்கு குழப்பநிலை ஏற்பட்டது.அதனைத் தொடர்ந்து சம்பந்தப்பட்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை.இதன்பின் இரண்டு தமிழ்இளைஞர்கள் நீர்வேலி யில் சுட்டுக்கொல்லப்பட்டனர்.இதன் பிறகு பெரும் கொந்தளிப்பு நிலை உருவானது.

மக்களின் இந்தக் கொந்தளிப்பின் பின்னர் படையினர் மக்கள்மீது கெடுபிடிகளை அதிகரித்து வருகின்றனர். இதன் தொடர்ச்சியாக படைகள் தமிழ்ப்பெண்கள் மீது பாலியல் வல்லுறவு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.இதனால் தமிழீழப் பெண்கள் பெரும்பீதியடைந்துள்ளனர்.

அண்மையில் தீவகம் அல்லைப் பிட்டியில் பெண் ஒருவரை கடற்படைச் சிப்பாய் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார். அதன் அடுத்தபடியாக வடமராட்சி வல்லிபுரம் கோவிலுக்கருகில் இராணுவக் காப்பரணுக்கு அருகில் பெண் ஒருவர் ரியனால் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்த நிலையில் சடலமாக கண்டுபிடிக்கப்பட்டிருந்தார். இதன் பின்னர் பொது மக்கள் முன்னிலையில் மிருசுவில் எழுதுமட்டுவாள் மருதங்குளத்தில் பதின்நான்கு வயதுச் சிறுமியை பாலியல்வல்லுறவுக்குட்படுத்த முயற்சித்தனர். அது மக்களின் எதிர்ப்பால் முறியடிக்கப்பட்டது.

இவற்றின்தொடர்ச்சியாக நேற்று முன்தினம் புங்குடுதீவு 7 ஆம்வட்டாரம் மடத்து வெளியைச் சேர்ந்த இருபதுவயதுடைய இளையதம்பி தர்சினி என்ற பெண் வழமையாக உறவினர் வீட்டுக்குச் செல்வதை அவதானித்து கடற்படைச்சிப்பாய்களால் பலவந்தமாக தூக்கிச்செல்லப்பட்டு பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டார். அதன் பின்கொடூரமாக கொலை செய்து அவரின் சடலத்தை கிணற்றில் போட்டிருக்கிறார்கள்.

இத்தகைய காட்டுமிராண்டித்தனமான செயற்பாடுகள் அதிகரிப்பான சூழல் தென்பட்டுக்கொண்டிருக்கிறது. இது அங்குள்ள ஒவ்வொரு பெண்களினதும் நடமாட்டத்துக்கும், பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருக்கிறது. படையினரின் இந்த நடவடிக்கைகளை தொடர்ந்தும் அனுமதிக்கமுடியாது. இது பற்றி கண்காணிப்புக்குழுவிற்கு தொலைபேசிமூலம் எமது கண்டனத்தை உடனடியாகத் தெரியப்படுத்தியதோடு இந்தக்காட்டு மிராண்டித்தனமான சம்பவத்தால் வரப்போகும் பாதிப்புக்கள் பற்றியும் தெளிவுபடுத்தியுள்ளோம்.

நாங்கள் வெளியேறியதன் பின்னர் குடாநாட்டில் பதின்நான்கிற்கும் அதிகமான கொலைச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. ஆறுவரையான பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் இடம்பெற்றதை நாம் இனங்கண்டிருக்கிறோம். இதனை நாம் வைத்துப்பார்க்கின்ற போது படைத்தரப்பு சமாதான நிலையில் இருந்து ஒரு மாற்றமான நிலைக்கு வந்திருப்பதன் அறிகுறியாகத்தான் இதனைப்பார்க்கின் றோம். அதனையே இது எடுத்துக் காட்டுகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

(லோ.தீ)

## புங்குடுதீவில் இளம்...

பகுதியில் சுண்டுக்குழி மாணவி கிருசாந்தி, புங்குடுதீவில் சாரதாம்பாள், கோண்டாவில் றஜனி போன்ற எமது பெண்களை தமது காடைத்தனத்துக்கு பலிகொண்டது போல் இன்று புங்குடுதீவில் 7ஆம் வட்டாரம் மத்துவெளியைச் சேர்ந்த இளையதம்பி தர்சினியையும் பலி கொண்டுள்ளது.

தனதுவீட்டிலிருந்து அயலிலுள்ள தனது பெரிய தாயின் வீட்டிற்கு சென்ற தர்சினி வீடு திரும்பவில்லை. இவரின் வீடு சிறிலங்காக் கடற்படையினரின் உயர்பாதுகாப்பு வலயப்பிரதேசத்தில் அமைந்துள்ளது.

நேற்று முன்தினம் பெரியதாயின் வீட்டுக்குச் சென்று வருவதாகச் சென்ற தர்சினி சடலமாக படை முகாமுக்கு அருகில் உள்ள கிணற்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளார்.குடாநாட்டில் சிறிலங்காப் படையினர் தொடர்ந்தும் தனது அடாவடித்தனத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளனர். இந்தக் கொலைக்கு சிறிலங்காக் கடற்படையே பொறுப்பு. இவ்வாறான நடவடிக்கைகளை படையினர் உடன் நிறுத்தவேண்டும்.தமிழ் மக்களாகிய நாம்இதனை தொடர்ந்தும் பொறுத்துக்கொண்டிருக்க முடியாது. இந்தப்படுகொலைச் சம்பவத்தை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம் எனத்தமிழ்தேசிய விழிப்புணர்வுக்கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்....

இந்தச் சம்பவம் தொடர்பாக எமது செய்தியாளர் அனுப்பிய முழுமையான விபரம் வருமாறு,

நேற்றுப் பிற்பகல் 3.00 மணியளவில் யாழ். பரமேஸ்வராச் சந்தியில் அமைந்துள்ள தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்தில் இருந்து. பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி படுகொலை செய்யப்பட்ட இளம் பெண்ணின் இறுதிக் கிரியையில் பங்கு கொள்வதற்காக மக்கள் புறப்பட்டுச் சென்றனர். இதில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் உட்பட நாற்பதுக்கும் அதிகமான மாணவர்கள், மற்றும் பொது மக்கள் மூன்று வாகனங்களில் புறப்பட்டுச் சென்றனர்.

இவ்வாறு புறப்பட்டவர்களை பரமேஸ்வராச்சந்திக்கு அருகில் காவலரணில் இருந்த படையினர் சூழ்ந்து வாகனங்களை இடைமறித்தனர். இதனால், படையினருக்கும் வாகனத்தில் பயணித்தவர்களுக்கும் இடையில் வாய்த்தர்க்கம் இடம் பெற்றது. இதன் உச்சக்கட்டமாக படையினரின் தடையையும் மீறி வாகனங்கள் புறப்பட்டன.

இந்த நிலையில் படையினரால் இரண்டு வாகனங்கள் அடித்து நொருக்கப்பட்டன. சமவேளை அந்த வாகனங்களில் பயணித்தவர்கள் மற்றும் அங்கு கூடிநின்ற மக்கள் என அனைவர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. அதேசமயம் மேலதிக படையினர் பலாலியில் இருந்தும் வேறு படைத்தளங்களில் இருந்தும் இராணுவ ட்ரக் மற்றும் பவள் கவச வாகனங்களில் கொண்டு வந்து குவிக்கப்பட்டனர்.

இப்படியாக குவிக்கப்பட்ட 400 இற்கும் அதிகமான படையினர் மாணவர் பேரவை மற்றும் பல்கலைக்கழகம் உள்ளிட்ட பகுதிகளைச் சுற்றி வளைத்து நிறுத்தப்பட்டனர். ஆயுதங்கள் தரித்தவாறு நிறுத்தப்பட்ட படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவாறு அப்பகுதியில் நின்ற மக்களைத் தாக்கியதுடன் வர்த்தகர்களையும் அடித்து விரட்டினர்.

இதேவேளை, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைக்குள் நுழைந்த பெருந் தொகையான இராணுவத்தினர் அங்கிருந்த தளபாடங்கள், ஜன்னல் கண்ணாடிகள், ஆவணங்கள் அனைத்தையும் அடித்து நொருக்கினர். அங்கு நிறுத்தப்பட்டிருந்த நான்கிற்கும் அதிகமான உந்துருளிகளை தாக்கிச் சேதப் படுத்தினர். 25இற்கும் அதிகமான துவிச்சக்கரவண்டிகளையும் அடித்துச் சேதப்படுத்தினர்.

படையினரின் இந்த நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மாணவர் பேரவையினர், பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் படையினர் மீது கற்களை எறிந்தனர். படையினர் துப்பாக்கிகளாலும் கட்டைகள், பொல்லுகள் போன்றவற்றாலும் தாகினர். சம்பவ இடத்துக்கு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் இரண்டு மணி நேரம் தாமதமாகவே பிரசன்னமாகியிருந்தனர்.

அதன்போது அங்கு படையினரின் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து படையினர் மீது எதிர்ப்புத் தாக்குதல் நடத்திய மாணவர்கள், மக்கள் கண்காணிப்புக் குழுவினரிடம் படையினரின் அடாவடித்தனங்களை முறையிட்டனர். கண்காணிப்புக் குழுவினரின் முன்னிலையில் படையினர் அங்கு கூடியிருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தினர்.

படையினரின் காட்டு மிராண்டித்தனமான தாக்குதலால் 35இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவத்தால் அதனூடான போக்குவரத்துக்களை படையினர் தடை செய்துள்ளனர். பவள் கவச வாகனங்களில் கொண்டு வந்து குவிக்கப்பட்ட படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். வெளி இடங்களில் இருந்து வந்த மக்கள் படையினரால் திருப்பி அனுப்பப்பட்டனர். இதனால், அங்கு பெரும் பதற்றம் நிலவியது. படையினருக்கும் மக்களுக்கும் இடையிலான எதிர்ப்பு இரவு 7.30 மணிவரை இடம்பெற்றது. (28.41.33.37)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.